கழக வெளியீடு-சஉ

உ

திருச்சிற்றம்பலம்

# திருக்குறள்

திருவள்ளுவர்

:: அருளியது ::

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி :: & சென்னை
விபவ சித்திரை

[2nd Edition

Published by
*The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited,*
*Tinnevelly & Madras.*
*April 1928*

Printed by
*C. Muniswamy Mudaliar & Sons, Madras.*

# பொருளடக்கம்

## பொருளடக்கம்



உ

திருச்சிற்றம்பலம்

---

## ஆசிரிய வணக்கம்

திருமுடி மிசையார் மயிர்முடி யழகுந்
தீர்க்கபுண் டரநுத லழகுந்
திரண்மணி புயங்கை வருஞ்செவி யழகுந்
திகழ்நெடுந் தாடியி னழகும்
அருமுடி செபமா லிகைசின்முத் திரைசே
ரபயஞேர் வலக்கையி னழகு
மமிழ்துறழ் தமிழ்மா மறைமுறை வரத
மமைதரு மிடக்கையி னழகுங்
கருமுடி யோகப் பட்டையி னழகுங்
கடிகொள்கிட் டோவண வழகுங்
கழல்களிற் றிகிரி வலைவரை யழகுங்
கமலநல் லாதனத் தழகுந்
தருமுடி முகிரேய் மயிலையி னிடைமா
தவர்கள்கண் டிறைஞ்சவீற் றிருக்குந்

தழைபுகழ்த் திருவள்ளுவரெனு நாம
சற்குரு சரணமே சரணம்.

## நூற் பெருமை

வள்ளுவர்செய் திருக்குறளை
மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி
யொருகுலத்துக் கொருநீதி.

மனோன்மணீயம்

---

உ

திருச்சிற்றம்பலம்

---

## திருவள்ளுவர் வரலாறு

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் கடைச்சங்க காலத்து உலகஞ் செய்த உயர் தவப்பயனாய்த் திருமயிலையில் ஆதிக்கும் பகவனுக்கும் பிறந்து, ஓர் சைவவேளாள மரபில் வளர்ந்து, கல்வி யறிவொழுக்கங்களிற் றலைநின்று, மார்க்கசகாயன் என்னும் சைவவேளாளரது அருமைத் திருமகள் வாசுகியம்மையை மணந்து, நெய்தற்றொழிலே எத்தொழிலையும் விடக் குற்றமற்ற தொழிலெனக் கொண்டு, கற்புக்கரசியாகிய அவ்வம்மையாருடன் தமது இல்வாழ்க்கையினைச் சிறக்க நடத்தினார் என்ப

இவர், கடவுள் உயிர் உலகம் என்னும் முப்பொருள் இலக்கணங்களையும் முற்றக்கற்று முழுதுணர்ந்த முனிவராகலின், பண்டைத் தண்டமிழ் மொழி வழக்கிற் கேற்பத் 'திருக்குறள்' என்னும் ஒப்புயர்வற்ற நூலை, அறம் பொருள் இன்பமென வகுத்து, குறட்பாவாலியற்றி உலகுய்ய அருளினர். இந்நூலை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றுகையில், சங்கப்பலகை ஏனைய நூல்களைப் புறத்தே தள்ளிவிட்டு இஃதொன்றையே ஏற்றுத் திகழ்ந்ததாம். ஆகவே, இது தனக்கொப்பாய நூல் வேறொன்றின்றித் தனிமாண்ட சிறப்பிய பெருநூல் என்பது வெள்ளிடைமலைபோற் றெள்ளியதாகும். மேலும்,

க

[illegible]

பண்டைத் தொட்டு இதுகாறும் உலகவழக்கில் நின்று நிலவும் அமிழ்தினுமினிய செந்தமிழ் மொழியின் முதற்கண்ணெழுந்த பெற்றித்தாய்த் தமிழ்நாட்டார்க்கு உறுதி பயக்கும் பெருமறையாய்ப் போற்றப் பெறுவதாய்; ஓதற்கினிதாய், கற்போர்க்கும் கேட்போர்க்கும் இன்பம் பயப்பதாய் எச்சமயத்தினர்க்கும் எக்காலத்திற்கும் எந்நாட்டினர்க்கும் பொதுவாய்; எல்லாச் சமயத்தினர்க்கும் பொதுவாகிய சொற்றொடர்களினாலே கடவுளைச் சுட்டுதலானும் நுணுகி யாராய்வார்க்கு அது சைவசமயப் பொதுத்தன்மையை விளக்குவதாய்; இதற்குப் பின்னெழுந்த நூல்களெல்லாம் இதன் மொழிப்பொருளைப் பொன்னேபோற் போற்றும் பெருமை வாய்ந்ததாய்; மேலைநாட்டில் வழங்கிவரும் ஆங்கில முதலிய பன்னிரு மொழிகளிலும், ஆரியம் தெலுங்கு முதலிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளதாய்; நவிறொறும் நவிறொறும் நறுஞ்சுவை பயப்பதாய், பயிறொறும் பயிறொறும் பழமையுடன் புதுமை காட்டுவதாய்; புறவிருள் நீக்கும் உலக ஞாயிறு போல மக்களின் அகவிருள் நீக்கும் அரிய பெற்றியதாய் விளங்குவது இந்நூல்.

இத்தகைய பெருநூலியற்றிய ஆசிரியர், தமது உளமகிழ்விக்குரிய மனைவி தமக்குமுன் உயிர்நீப்பச், சிலகாலமிருந்து, பல அருஞ்செயல்களைச் செய்து, ஏலேலசிங்கர் முதலிய தமது மாணவர்களை அன்புடன் வாழ்த்தி, உலகத்தில் என்றும் அழியாப் புகழ் பரப்பி, ஒரு வைகாசிப் பனை (அனுஷ) நாளில் எல்லாம் வல்ல இறைவன் திருவடிநிழலெய்தினரென்று கூறுப

திருவள்ளுவர் திருவடி வாழ்க

ம

## திருவள்ளுவரின் வேறு பெயர்கள்

- ௧. நாயனர்
- ௨. தேவர்
- ௩. முதற்பாவலர்
- ௪. தெய்வப்புலவர்
- ௫. நான்முகனர்
- ௬. மாதானுபங்கி
- ௭. செந்நாப்போதார்
- ௮. பெருநாவலர்

---

## திருக்குறளின் வேறு பெயர்கள்

- ௧. முப்பானூல்
- ௨. உத்தரவேதம்
- ௩. தெய்வநூல்
- ௪. திருவள்ளுவர்
- ௫. பொய்யாமொழி
- ௬. வாயுறைவாழ்த்து
- ௭. தமிழ்மறை
- ௮. பொதுமறை

# அதிகார வகராதி

| அதிகாரம் | பக்கம் |
|---|---|
| அடக்கமுடைமை | ௧௩ |
| அமைச்சு | ௬௪ |
| அரண் | ௭௫ |
| அருளுடைமை | ௨௫ |
| அலரறிவுறுத்தல் | ௧௧௫ |
| அவர்வயின்விதும்பல் | ௧௨௭ |
| அவாவறுத்தல் | ௩௭ |
| அவையஞ்சாமை | ௭௩ |
| அவையறிதல் | ௭௨ |
| அழுக்காறாமை | ௧௭ |
| அறன்வலியுறுத்தல் | ௪ |
| அறிவுடைமை | ௪௩ |
| அன்புடைமை | ௮ |
| ஆள்வினையுடைமை | ௬௨ |
| இகல் | ௮௬ |
| இடனறிதல் | ௫௰ |
| இடுக்கணழியாமை | ௬௩ |
| இரவச்சம் | ௱௭ |
| இரவு | ௱௬ |
| இல்வாழ்க்கை | ௫ |
| இறைமாட்சி | ௩௯ |

| அதிகாரம் | பக்கம் |
|---|---|
| இனியவைகூறல் | ௰ |
| இன்னாசெய்யாமை | ௩௨ |
| ஈகை | ௨௩ |
| உட்பகை | ௮௯ |
| உழவு | ௱௪ |
| உறுப்புநலனழிதல் | ௧௨௪ |
| ஊக்கமுடைமை | ௬௰ |
| ஊடலுவகை | ௧௩௩ |
| ஊழ் | ௩௮ |
| ஒப்புரவறிதல் | ௨௨ |

௧௧
திருக்குறள்

வெகுளாமை ௩௧
வெஃகாமை ௧௮
வெருவந்தசெய்யாமை ௫௭

கூ

உ
திருச்சிற்றம்பலம்

# திருக்குறள்

## அறத்துப்பால்

1
~~அதிகாரக்கிரமம்~~ பாயிரம்

### ௧. கடவுள்வாழ்த்து

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு ௧

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின் ௨

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் ௩

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில ௪

இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு ௫

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார் ௬

தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது ௭

அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது. அ
கோளிற் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை. கூ
பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார். ய

க

பாயிரம் அதிகாரம் திருக்குறள்

## உ. வான்சிறப்பு

வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று. க
துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை. உ
விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி. ங
ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால். ச
கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை. ரு
விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது. சா
நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின். எ
சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு. அ
தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின். கூ
நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு. ய

உ

3

அறம் அதிகாரம் பாயிரம்

## ங. நீத்தார்பெருமை

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு. க

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று. ௨

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. ௩

உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர் வித்து. ௪

ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி. ௫

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். ௬

சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு. ௭

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். ௮

குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது. ௯

அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான். ௰

௫

பாயிரம் அதி. ௪ திருக்குறள்

## அறன்வலியுறுத்தல்

சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு. ௧

அறத்தினூஉ காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு. ௨

ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல். ௩

மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர பிற. ௪

அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கு
மிழுக்கா வியன்ற தறம். ௫

அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை. ௬

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை. ௭

வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல். ௮
அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில. ௯
செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி. ௰





## இல்வாழ்க்கை

இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை. ௧
துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை. ௨
தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை. ௩
பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்று மில். ௪
அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது. ௫
அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன். ௬
இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை. ௭
ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து. ௮
அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று. ௯
வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும். ௰





## வாழ்க்கைத் துணைநலம்

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. க

மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில். உ

இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ
னில்லவண் மாணாக் கடை. ௩

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின். ௪

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை. ௫

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். ௬

சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை. ௭

பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு. ௮

புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை. ௯

மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு. ௰

அறம் அதி. எ இல்லறவியல்

## மக்கட்பேறு

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற. க

எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். உ

தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும். ௩

அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ். ௪

மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு. ௫

குழலினி தியாழினி தென்பதம் மக்கண்
மழலைச்சொற் கேளா தவர். ௬

தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல். ௭

தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து

மன்னுயிர்க் கெல்லா மினிது. ௮

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய். ௯

மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல். ௰

௭



## அன்புடைமை

அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்.

அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு.

அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு. ௩

அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு. ௪

அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு. ௫

அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை. ௬

என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம். ௭

அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று. ௮

புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு. ௯

அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு. ௰

௮



## விருந்தோம்பல்

இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. ௧

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. ௨

வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று. ௩
அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில். ௪
வித்துமிட வேண்டுங்கொல் லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம். ௫
செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு. ௬
இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன். ௭
பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். ௮
உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்க ணுண்டு. ௯
மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. ௰





## இனியவைகூறல்

இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். ௧
அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின். ௨
முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானா
மின்சொ லினதே யறம். ௩
துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறூஉ மின்சொ லவர்க்கு. ௪
பணிவுடைய னின்சொல னாத லொருவற்
கணியல்ல மற்றுப் பிற. ௫
அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின். ௬
நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல். ௭
சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு

மிம்மையு மின்பந் தரும். ௮
இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. ௯
இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. ௰

ய)



## செய்ந்நன்றியறிதல்

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது. ௧
காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது. ௨
பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது. ௩
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார். ௪
உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. ௫
மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு. ௬
எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு. ௭
நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. ௮
கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும். ௯
எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. ௰



## நடுவுநிலைமை

தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின். ௧
செப்ப முடையவ னாக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து. ௨
நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல். ௩

தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும். ௪
கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி ௫
கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்சம்
நடுவொரீஇ யல்ல செயின் ௬
கெடுவாக வையா துலகம் நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு. ௭
சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி. ௮
சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின். ௯
வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின். ௰

௧௨

**அறம்** அதி. ௧௩. **இல்லறவியல்**

## அடக்கமுடைமை

அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்.
காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூஉங் கில்லை யுயிர்க்கு.
செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்.
நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற
மலையினு மாணப் பெரிது.
எல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.
ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து.
யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.
ஒன்றானுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயி
னன்றாகா தாகி விடும்.
தீயினாற் சுட்டபு ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு.
கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து.

௧௩

## ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும். ௧

பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை. ௨

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும். ௩

மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்குங் குன்றக் கெடும். ௪

அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு. ௫

ஒழுக்கத்தி னொல்கா ருரவோ ரிழுக்கத்தி
னேதம் படுபாக் கறிந்து. ௬

ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப் பழி. ௭

நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும். ௮

ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். ௯

உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார். ௰





## பிறனில்விழையாமை

பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ணில்.

அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்.

விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்தொழுகு வார்.

எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்.

எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்.
அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.
பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ வான்ற வொழுக்கு.
நலக்குரியார் யாரெனி னாமநீர் வைப்பிற்
பிறற்குரியா டோடோயா தார்.
அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.





## பொறையுடைமை

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை. ௧
பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று. ௨
இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை. ௩
நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும். ௪
ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. ௫
ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். ௬
திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று. ௭
மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல். ௮
துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னாச்சொ னோற்கிற் பவர். ௯
உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னாச்சொ னோற்பாரிற் பின். ௰

## அழுக்காறாமை

ஒழுக்காறாக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு. ௧

விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின். ௨

அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான். ௩

அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து. ௪

அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது. ௫

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும். ௬

அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும். ௭

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும். ௮

அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும். ௯

அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில். ௰





## வெஃகாமை

நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும். ௧

படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர். ௨

சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர். ௩

இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர். ௪

அஃகி யகன்ற வறிவென்னா மியார்மாட்டும்
வெஃகி வெறிய செயின். ௫

அருள்வெஃகி யாற்றின்க ணின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும். ௬

வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின்

மாண்டற் கரிதாம் பயன். ௭
அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். ௮
அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேருந்
திறனறிந் தாங்கே திரு. ௯
இறலீனு மெண்ணாது வெஃகின் விறலீனும்
வேண்டாமை யென்னுஞ் செருக்கு. ௰

௧௮



## புறங்கூறாமை

அறங்கூறா னல்ல செயினு மொருவன்
புறங்கூறா னென்ற லினிது. ௧
அறனழீஇ அல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை. ௨
புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூற்ற மாக்கந் தரும். ௩
கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல். ௪
அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும். ௫
பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளும்
திறன்றெரிந்து கூறப் படும். ௬
பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட லேற்றா தவர். ௭
துன்னியார் குற்றமுந் தூற்று மரபினா
ரென்னைகொ லேதிலார் மாட்டு. ௮
அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை. ௯
ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு. ௰

௧௯



## பயனிலசொல்லாமை

பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும். ௧
பயனில பல்லார்முற் சொல்ல னயனில

நட்டார்கட் செய்தலிற் றீது. ௨
நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு முரை. ௩
நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாராப்
பண்பில்சொற் பல்லா ரகத்து. ௪
சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின். ௫
பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல். ௬
நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று. ௭
அரும்பய னாயு மறிவினார் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல். ௮
பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடீர்ந்த
மாசறு காட்சி யவர். ௯
சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். ௰

௨௰



## தீவினையச்சம்

தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு. ௧
தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும். ௨
அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல். ௩
மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு. ௪
இலனென்று தீயவை செய்யற்க செய்யி
னிலனாகு மற்றும் பெயர்த்து. ௫
தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான். ௬
எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும். ௭
தீயவை செய்தார் கெடுத லிழறன்னை
வீயா தடியுறைந் தற்று. ௮
தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்றுந்

துன்னற்க தீவினைப் பால். ௯
அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின். ௰





## ஒப்புரவறிதல்

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு. க
தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. உ
புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
யொப்புரவி னல்ல பிற. ௩
ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான
செத்தாருள் வைக்கப் படும். ௪
ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு. ரு
பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வ
நயனுடை யான்கட் படின். ௬
மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின். எ
இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர். அ
நயனுடையா னல்கூர்ந்தா னாதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு. ௯
ஒப்புரவி னால்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து. ௰





## ஈகை

வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. க
நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று. உ
இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள. ௩

இன்னா திரக்கப் படுத லிரந்தவ
ரின்முகங் காணு மளவு. ௪
ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின். ௫
அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. ௬
பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது. ௭
ஈத்துவக்கு மின்ப மறியார்கொ றாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். ௮
இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல். ௯
சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீத லியையாக் கடை. ௰





## புகழ்

ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு. ௧
உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
றீவார்மே னிற்கும் புகழ். ௨
ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில். ௩
நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு. ௪
நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. ௫
தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று. ௬
புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவ தெவன். ௭
வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு
மெச்சம் பெறாஅ விடின். ௮
வசையிலா வண்பயன் குன்று மிசையிலா
யாக்கை பொறுத்த நிலம். ௯
வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர். ௰

## அருளுடைமை

அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள. ௧
நல்லாற்றா னாடி யருளாள்க பல்லாற்றாற்
றேரினு மஃதே துணை. ௨
அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
வின்னா வுலகம் புகல். ௩
மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை. ௪
அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி. ௫
பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்ப ரருணீங்கி
யல்லவை செய்தொழுகு வார். ௬
அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு. ௭
பொருளற்றார் பூப்ப ரொருகா லருளற்றா
ரற்றார்மற் றாத லரிது. ௮
தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற் றேரி
னருளாதான் செய்யு மறம். ௯
வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து. ௰





## புலான்மறுத்தல்

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள். ௧
பொருளாட்சி போற்றாதார்க் கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்றின் பவர்க்கு. ௨
படைகொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொன்ற
னுடல்சுவை யுண்டார் மனம். ௩

அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் தினல். ௪
உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
வண்ணாத்தல் செய்யா தளறு. ௫
தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில். ௬
உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின். ௭
செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணா
ருயிரிற் றலைப்பிரிந்த வூன். ௮
அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று. ௯
கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும். ௰





## தவம்

உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு. ௧
தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கொள் வது. ௨
துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொன்
மற்றை யவர்கள் தவம். ௩
ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும். ௪
வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும். ௫
தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வாமற் றல்லா
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு. ௬
சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. ௭
தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும். ௮
கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
னாற்ற றலைப்பட் டவர்க்கு. ௯
இலர்பல ராகிய காரண நோற்பார்
சிலர்பலர் நோலா தவர். ௰

## கூடாவொழுக்கம்

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும். ௧
வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின். ௨
வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று. ௩
தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று. ௪
பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மெற்றெற்றென்
றேதம் பலவுந் தரும். ௫
நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணா ரில். ௬
புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து. ௭
மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர். ௮
கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல். ௯
மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின். ௰





## கள்ளாமை

எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு. ௧
உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல். ௨
களவினா லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும். ௩
களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும். ௪
அருள்கருதி யன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்க ணில். ௫

அளவின்க ணின்றொழுக லாற்றார் களவின்கட்
கன்றிய காத லவர். ௬
களவென்னுங் காரறி வாண்மை யளவென்னு
மாற்றல் புரிந்தார்க ணில். ௭
அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு. ௮
அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர். ௯
கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு. ௰





## வாய்மை

வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல். ௧
பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின். ௨
தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும். ௩
உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன். ௪
மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை. ௫
பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும். ௬
பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. ௭
புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும். ௮
எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. ௯
யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற. ௰





## வெகுளாமை

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக்

காக்கினென் காவாக்கா லென். ௧

செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்து
மில்லதனிற் றீய பிற. ௨

மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனான் வரும். ௩

நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற. ௪

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம். ௫

சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு
மேமப் புணையைச் சுடும். ௬

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று. ௭

இணரெரி தோய்வன்ன வின்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. ௮

உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின். ௯

இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. ௰





## இன்னாசெய்யாமை

சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள். ௧

கறுத்தின்னா செய்தவக் கண்ணு மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள். ௨

செய்யாமற் செற்றார்க்கு மின்னாத செய்தபி
னுய்யா விழுமந் தரும். ௩

இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல். ௪

அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை. ௫

இன்னா வெனத்தா னுணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல். ௬

எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானா
மாணாசெய் யாமை தலை. ௭

தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல். ௮

பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும். ௯

நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யா
நோயின்மை வேண்டு பவர். ௰





## கொல்லாமை

அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும். ௧

பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை. ௨

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று. ௩

நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி. ௪

நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் றலை. ௫

கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று. ௬

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. ௭

நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகு மாக்கங் கடை. ௮

கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து. ௯

உயிருடம்பி னீக்கியா ரென்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். ௰





## நிலையாமை

நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை. ௧

கூழ்தாட் டவைக்குழாஅ் ற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று. ௨
அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்றா
லற்குப வாங்கே செயல். ௩
நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின். ௪
நாச்செற்று விக்குள்மேல் வாரா முன் னல்வினை
மேற்சென்று செய்யப் படும். ௫
நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. ௬
ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல. ௭
குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு. ௮
உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. ௯
புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சி லிருந்த வுயிர்க்கு. ௰

௩௫

அறம் அதி. ௩௪ துறவறவியல்

## துறவு

யாதனின் யாதனி னீங்கியா னோதல்
லதனி னதனி னிலன். ௧
வேண்டி னுண் டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பால பல. ௨
அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு. ௩
இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து. ௪
மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை. ௫
யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும். ௬
பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு. ௭
தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். ௮
பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று

நிலையாமை காணப் படும். ௯

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. ௰

௩௫

துறவறவியல் அதி. ௩௬ திருக்குறள

## மெய்யுணர்தல்

பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு
மருளானா மாணாப் பிறப்பு. ௧

இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு. ௨

ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து. ௩

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. ௪

எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. ௫

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. ௬

ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு. ௭

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு. ௮

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய். ௯

காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னாமங் கெடக்கெடு நோய். ௰

௩௬

அறம் அதி. ௩௭ துறவறவியல்

## அவாவறுத்தல்

அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து. ௧

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும். ௨

வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில். ௩

தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும். ௪

அற்றவ ரென்பா ரவாவற்றார் மற்றையா
ரற்றாக வற்ற திலர். ௫

அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா. ௬

அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும். ௭

அவாவில்லார்க் கில்லாகுந் துன்ப மஃதுண்டேற்
றவாஅது மேன்மேல் வரும். ௮

இன்ப மிடையறா தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின். ௯

ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும். ௰



## ஊழ்

ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி. ௧

பேதைப் படுக்கு மிழவூ ழறிவகற்று
மாகலூ ழுற்றக் கடை. ௨

நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
னுண்மை யறிவே மிகும். ௩

இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு. ௪

நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு. ௫

பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம. ௬

வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது. ௭

துறப்பார்மற் றுப்புர வில்லா ருறற்பால
வூட்டா கழியு மெனின். ௮

நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கா
லல்லற் படுவ தெவன். ௯

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும். ௰

# பொருட்பால்

அதி. ௩௯ **அரசியல்**

## இறைமாட்சி

படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
முடையா னரசரு ளேறு. ௧

அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தற் கியல்பு. ௨

தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்று
நீங்கா நிலனாள் பவர்க்கு. ௩

அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு. ௪

இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு. ௫

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம். ௬

இன்சொலா லீத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலாற்
றான்கண் டனைத்திவ் வுலகு. ௭

முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும். ௮

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு. ௯
கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கு
முடையானாம் வேந்தர்க் கொளி. ௰

௩௯



## கல்வி

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக. ௧
எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. ௨
கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். ௩
உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில். ௪
உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர். ௫
தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு. ௬
யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு. ௭
ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து. ௮
தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். ௯
கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.[1] ௰

௪௰



## கல்லாமை

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். ௧
கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுற் றற்று. ௨

கல்லா ரவரு நனிநல்லர் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின்.
கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளா ரறிவுடை யார். ௪
கல்லா வொருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். ௫
உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர். ௬
நுண்மாண் நுழைபுல மில்லா னெழினலம்
மண்மாண் புனைபாவை யற்று. ௭
நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு. ௮
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. ௯
விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். ௰

௪௧



## கேள்வி

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை. ௧
செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும். ௨
செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி
னான்றாரோ டொப்பர் நிலத்து. ௩
கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை. ௪
இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல். ௫
எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும். ௬
பிழைத்துணர்ந் தும்பேதைமை சொல்லா ரிழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர். ௭
கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்

தோட்கப் படாத செவி. அ
நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது. கூ
செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென். ம

சஉ



## அறிவுடைமை

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
முள்ளழிக்க லாகா அரண். க
சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு. உ
எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. ங
எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு. ச
உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு. ரு
எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு. சா
அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா
ரஃதறி கல்லா தவர். எ
அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில். அ
எதிரதாக் காக்கு மறிவினார்க் கில்லை
யதிர வருவதோர் நோய். கூ
அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர். ம

சங



## குற்றங்கடிதல்

செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து. க
இவறலு மாண்பிறந்த மானமு மாணா
வுவகையு மேத மிறைக்கு. உ
தினைத்துணையாக் குற்றம் வரினும் பனைத்துணையாக்

கொள்வர் பழிநா ணுவார். ௩

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
பற்றந் தரூஉம் பகை. ௪

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். ௫

ன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகு மிறைக்கு. ௬

செயற்பால செய்யா திவறியான் செல்வ
உயற்பால தன்றிக் கெடும். ௭

ற்றுள்ள மென்னு மிவறன்மை யெற்றுள்ளு
மெண்ணப் படுவதொன் றன்று. ௮

யவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
ன்றி பயவா வினை. ௯

தல காத லறியாமை யுய்க்கிற்பி
னதில வேதிலார் நூல். ௰

௪௪



## பெரியாரைத் துணைக்கோடல்

அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல். ௧

உற்றநோய் நீக்கி யுறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். ௨

அரியவற் றுளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். ௩

தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை. ௪

சூழ்வார்கண் ணாக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். ௫

தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில். ௬

இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர். ௭

இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும். ௮

முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை. ௯
பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். ௰

௪௫

அரசியல் அதி. ௪௬ திருக்குறள்

## சிற்றினஞ்சேராமை

சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். ௧
நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு. ௨
மனத்தானா மாந்தர்க் குணர்ச்சி யினத்தானா
மின்னா னெனப்படுஞ் சொல். ௩
மனத்துள துபோலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு. ௪
மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டு
மினந்தூய்மை தூவா வரும். ௫
மனந்தூயார்க் கெச்சநன் றாகு மினந்தூயார்க்
கில்லைநன் றாகா வினை. ௬
மனநல மன்னுயிர்க் காக்க மினநல
மெல்லாப் புகழுந் தரும். ௭
மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப் புடைத்து. ௮
மனநலத்தி னாகு மறுமைமற் றஃது
மினநலத்தி னேமாப் புடைத்து. ௯
நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில். ௰

௪௬

பொருள் அதி. ௪௭ அரசியல்

## தெரிந்துசெயல்வகை

அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல். ௧
தெரிந்த வினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொரு ளியாதொன்று மில். ௨
ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார். ௩

தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னு
மேதப்பா டஞ்சு பவர். ௪
வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு. ௫
செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும். ௬
எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு. ௭
ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும். ௮
நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை. ௯
எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு. ௰





## வலியறிதல்

வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல். ௧
ஒல்வ தறிவ தறிந்ததன் கட்டங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில். ௨
உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர். ௩
அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்னை
வியந்தான் விரைந்து கெடும். ௪
பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின். ௫
நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும். ௬
ஆற்றி னளவறிந் தீக வதுபொருள்
போற்றி வழங்கு நெறி. ௭
ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை. ௮
அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
வில்லாகித் தோன்றாக் கெடும். ௯
உளவரை தூக்காத வொப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும். ௰

## காலமறிதல்

பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. க

பருவத்தோ டொட்ட வொழுக லொருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு. உ

அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின். ங

ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின். ச

காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர். ரு

ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து. சு

பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்ப ரொள்ளி யவர். எ

செறுநரைக் காணிற் சுமக்க விறுவரை
காணிற் கிழக்காந் தலை. அ

எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல். கூ

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து. ய





## இடனறிதல்

தொடங்கற்க வெவ்வினையு மெள்ளற்க முற்று
மிடங்கண்ட பின்னல் லது. க

முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கு மரண்சேர்ந்தா
மாக்கம் பலவுந் தரும். உ

ஆற்றாரு மாற்றி யடுப விடனறிந்து
போற்றார்கட் போற்றிச் செயின். ங

எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின். ச

நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலி
னீங்கி னதனைப் பிற. ௫

கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து. ௬

அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின். ௭

சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுபடையா
னூக்க மழிந்து விடும். ௮

சிறைநலனுஞ் சீரு மிலரெனினு மாந்த
ருறைநிலத்தோ டொட்ட லரிது. ௯

காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு. ௰

௫௰

பொருள் அதி. ௫௧ அரசியல்

## தெரிந்துதெளிதல்

அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
றிறந்தெரிந்து தேறப் படும். ௧

குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியு
நாணுடையான் கட்டே தெளிவு. ௨

அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கா
லின்மை யரிதே வெளிறு. ௩

குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல். ௪

பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல். ௫

அற்றாரைத் தேறுத லோம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி. ௬

காதன்மை கந்தா வறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாந் தரும். ௭

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும். ௮

தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபின்
றேறுக தேறும் பொருள். ௯

தேரான் தெளிவுந் தெளிந்தான்க ணையுறவுந்
தீரா விடும்பை தரும். ௰

௫௧

## தெரிந்துவினையாடல்

நன்மையுந் தீமையு நாடி நலம்புரிந்த
தன்மையா னாளப் படும். ௧
வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
யாராய்வான் செய்க வினை. ௨
அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கு
நன்குடையான் கட்டே தெளிவு. ௩
எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகு மாந்தர் பலர். ௪
அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று. ௫
செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த வுணர்ந்து செயல். ௬
இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன்கண் விடல். ௭
வினைக்குரிமை நாடிய பின்றை யவனை
யதற்குரிய னாகச் செயல். ௮
வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்குந் திரு. ௯
நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு. ௰



## சுற்றந்தழால்

பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள. ௧
விருப்பறாச் சுற்ற மியையி னருப்பறா
வாக்கம் பலவுந் தரும். ௨
அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று. ௩
சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன். ௪
கொடுத்தலு மின்சொலு மாற்றி னடுக்கிய

சுற்றத்தாற் சுற்றப் படும். ௫
பெருங்கொடையான் பேணான் வெகுளி யவனின்
மருங்குடையார் மாநிலத் தில். ௬
காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு
மன்னநீ ரார்க்கே யுள. ௭
பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி
னதுநோக்கி வாழ்வார் பலர். ௮
தமராகித் தற்றுறந்தார் சுற்ற மமராமைக்
காரண மின்றி வரும். ௯
உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்த
னிழைத்திருந் தெண்ணிக் கொளல். ௰

௫௩



## பொச்சாவாமை

இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு. ௧
பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு. ௨
பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
தெப்பானூ லோர்க்குந் துணிவு. ௩
அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. ௪
முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும். ௫
இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை
வாயி னதுவொப்ப தில். ௬
அரியவென் றாகாத வில்லைபொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின். ௭
புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையு மில். ௮
இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. ௯
உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றுந்தா
னுள்ளிய துள்ளப் பெறின். ௰

## செங்கோன்மை

ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை. ௧
வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி. ௨
அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல். ௩
குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன
னடிதழீஇ நிற்கு முலகு. ௪
இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு. ௫
வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின். ௬
இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கு முட்டாச் செயின். ௭
எண்பதத்தா னோரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தாற் றானே கெடும். ௮
குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில். ௯
கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். ௰

௫௫



## கொடுங்கோன்மை

கொலைமேற்கொண் டாரிற் கொடிதே யலைமேற்கொண்
டல்லவை செய்தொழுகும் வேந்து. ௧
வேலொடு நின்றா னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்றா னிரவு. ௨
நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ
னாடொறு நாடு கெடும். ௩
கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு. ௪
அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. ௫

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேன்
மன்னாவா மன்னர்க் கொளி. ௬

துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்
தனளியின்மை வாழு முயிர்க்கு. ௭

இன்மையி னின்னா துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின். ௮

முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
யொல்லாது வானம் பெயல். ௯

ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின். ௰

௫௬

பொருள் — அதி. ௫௭ — அரசியல்

## வெருவந்தசெய்யாமை

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தா
லொத்தாங் கொறுப்பது வேந்து. ௧

கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்க
நீங்காமை வேண்டு பவர். ௨

வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயி
னொருவந்த மொல்லைக் கெடும். ௩

இறைகடிய னென்றுரைக்கு மின்னாச்சொல் வேந்த
னுறைகடுகி யொல்லைக் கெடும். ௪

அருஞ்செவ்வி யின்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து. ௫

கடுஞ்சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும். ௬

கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த
னடுமுரண் டேய்க்கு மரம். ௭

இனத்தாற்றி யெண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு. ௮

செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும். ௯

கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை. ௰

௫௭

## கண்ணோட்டம்

கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
யுண்மையா னுண்டிவ் வுலகு. க
கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை. உ
பண்ணென்னாம் பாடற் கியைபின்றேற் கண்ணென்னாங்
கண்ணோட்ட மில்லாத கண். ௩
உளபோன் முகத்தெவன் செய்யு மளவினாற்
கண்ணோட்ட மில்லாத கண். ச
கண்ணிற் கணிகலங் கண்ணோட்ட மஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும். ரு
மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர். சா
கண்ணோட்ட மில்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்ட மின்மையு மில். எ
கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு. அ
ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. கூ
பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர். ௰

ருஅ



## ஒற்றாடல்

ஒற்று முறைசான்ற நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண். க
எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில். உ
ஒற்றினா னொற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில். ௩
வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றாங்
கனைவரையு மாராய்வ தொற்று. ச
கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
முகாஅமை வல்லதே யொற்று. ரு

துறந்தார் படிவத்தா ராகி யிறந்தாராய்க்
தென்செயினுஞ் சோர்விலை தொற்று. ௬
மறைந்தவை கேட்கவற் றாகி யறிந்தவை
யையப்பா டில்லதே யொற்று. ௭
ஒற்றொற்றித் தந்த பொருளையு மற்றுமோ
ரொற்றினா லொற்றிக் கொளல். ௮
ஒற்றொற் றுணராமை யாள்க வுடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும். ௯
சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க செய்யிற்
புறப்படுத்தா னாகு மறை. ௰

௫௯

அரசியல் அதி. ௬௰ திருக்குறள்

## ஊக்கமுடைமை

உடைய ரெனப்படுவ தூக்க மஃதில்லா
ருடைய துடையரோ மற்று. ௧
உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். ௨
ஆக்க மிழந்தேமென் றல்லாவா ரூக்க
மொருவந்தங் கைத்துடை யார். ௩
ஆக்க மதர்வினாய்ச் செல்லு மசைவிலா
வூக்க முடையா னுழை. ௪
வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்தம்
முள்ளத் தனைய துயர்வு. ௫
உள்ளுவ தெல்லா முயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து. ௬
சிதைவிடத் தொல்கா ருரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றுங் களிறு. ௭
உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு. ௮
பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். ௯
உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு. ௰

௬௰

பொருள் அதி. ௬௧ அரசியல்

## மடியின்மை

குடியென்னுங் குன்றா விளக்க மடியென்னு

மாசூர மாய்ந்து கெடும். ௧

மடியை மடியா வொழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர். ௨

மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினு முந்து. ௩

குடிமடிந்து குற்றம் பெருகு மடிமடிந்து
மாண்ட வுஞற்றி லவர்க்கு. ௪

நெடுநீர் மறவி மடிதுயி னான்குங்
கெடுநீரார் காமக் கலன். ௫

படியுடையார் பற்றமைந்தக் கண்ணு மடியுடையார்
மாண்பய னெய்த லரிது. ௬

இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட வுஞற்றி லவர். ௭

மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் னொன்னார்க்
கடிமை புகுத்தி விடும். ௮

குடியாண்மை யுள்வந்த குற்ற மொருவன்
மடியாண்மை மாற்றக் கெடும். ௯

மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
றாஅய தெல்லா மொருங்கு. ௰

௬௧

அரசியல் அதி. ௬௨ திருக்குறள்

## ஆள்வினையுடைமை

அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். ௧

வினைக்கண் வினைகெட லோம்பல் வினைக்குறை
தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு. ௨

தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு. ௩

தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும். ௪

இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண். ௫

முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும். ௬

மடியுளாள் மாமுகடி யென்ப மடியிலான்

றாளுளா டாமரையி னாள். ௭
பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி. ௮
தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். ௯
ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர். ௰

௬௨



# இடுக்கணழியாமை

இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில். ௧
வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும். ௨
இடும்பைக் கிடும்பை படுப்ப ரிடும்பைக்
கிடும்பை படாஅ தவர். ௩
மடுத்தவா யெல்லாம் பகடன்னா னுற்ற
விடுக்க ணிடர்ப்பா டுடைத்து. ௪
அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும். ௫
அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
றோம்புத றேற்றா தவர். ௬
இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதா மேல். ௭
இன்பம் விழையா னிடும்பை யியல்பென்பான்
றுன்ப முறுத லிலன். ௮
இன்பத்து ளின்பம் விழையாதான் றுன்பத்துட்
டுன்ப முறுத லிலன். ௯
இன்னாமை யின்ப மெனக்கொளி னாகுந்தன்
னொன்னார் விழையுஞ் சிறப்பு. ௰

௬௩

## அமைச்சு

கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு
மருவினையு மாண்ட தமைச்சு. க

வன்கண் குடிகாத்தல் கற்றறித லாள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு. உ

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு. ௩

தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு. ௪

அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்
திறனறிந்தான் றேர்ச்சித் துணை. ௫

மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை. ௬

செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை யறிந்து செயல். ௭

அறிகொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன். ௮

பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோ
ரெழுபது கோடி யுறும். ௯

முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர். ௰





## சொல்வன்மை

நாநல மென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ளதூஉ மன்று. க

ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு. உ

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல். ௩

திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும்
பொருளு மதனினூஉங் கில். ௪

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து. ௫

வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள். ௬

சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை
யிகல்வெல்லல் யார்க்கு மரிது. ௭

விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். ௮

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்றா தவர். ௯

இணருழ்த்து நாறா மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார். ௰



## வினைத்தூய்மை.

துணைநல மாக்கந் தரூஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாந் தரும். ௧

என்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை. ௨

ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னு மவர். ௩

இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர். ௪

எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று. ௫

ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. ௬

பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை. ௭

கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதா
முடிந்தாலும் பீழை தரும். ௮

அழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்
பிற்பயக்கு நற்பா லவை. ௯

சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று. ௰



## வினைத்திட்பம்

வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப

மற்றைய வெல்லாம் பிற. க

ஊறொரா லுற்றபி னொல்காமை யிவ்விரண்டி
னாறென்ப ராய்ந்தவர் கோள். உ

கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்கொட்கி
னெற்றா விழுமந் தரும். ௩

சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல். ௪

வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்க
ணூறெய்தி யுள்ளப் படும். ௫

எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். ௬

உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து. ௭

கலங்காது கண்ட வினைக்கட் டுளங்காது
தூக்கங் கடிந்து செயல். ௮

துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை. ௯

எனைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு. ௰

௬௭



## வினைசெயல்வகை

சூழ்ச்சி முடிவு துணிவெய்த லத்துணிவு
தாழ்ச்சியுட் டங்குதல் தீது. க

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. உ

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்காற்
செல்லும்வாய் நோக்கிச் செயல். ௩

வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்காற்
றீயெச்சம் போலத் தெறும். ௪

பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்து
மிருடீர வெண்ணிச் செயல். ௫

முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். ௬

செய்வினை செய்வான் செயன்முறை யவ்வினை
யுள்ளறிவா னுள்ளங் கொளல். ௭

வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று. அ
நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
யொட்டாரை யொட்டிக் கொளல். ௯
உறைசிறியா ருண்ணடுங்க லஞ்சிக் குறைபெறிற்
கொள்வர் பெரியார்ப் பணிந்து. ௰

௬அ

பொருள் அதி. ௬௯ அங்கவியல்

## தூது

அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு. ௧
அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றி யமையாத மூன்று. ௨
நூலாரு ணூல்வல்ல னாகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு. ௩
அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு. ௪
தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது. ௫
கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தாற்
றக்க தறிவதாந் தூது. ௬
கடனறிந்து காலங் கருதி யிடனறிந்
தெண்ணி யுரைப்பான் றலை. ௭
தூய்மை துணைமை துணிவுடைமை யிம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு. அ
விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன். ௯
இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது. ௰

௬௯

அங்கவியல் அதி. எ௰ திருக்குறள்

## மன்னரைச்சேர்ந்தொழுகல்

அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். ௧
மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய வாக்கந் தரும். ௨

போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்
றேற்றுதல் யார்க்கு மரிது. ௩
செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுக
லான்ற பெரியா ரகத்து. ௪
எப்பொருளு மோரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்காற் கேட்க மறை. ௫
குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல். ௬
வேட்பன சொல்லி வினையில வெஞ்ஞான்றுங்
கேட்பினுஞ் சொல்லா விடல். ௭
இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
வொளியோ டொழுகப் படும். ௮
கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர். ௯
பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும். ௰

௭௰

பொருள் அதி. ௭௧ அங்கவியல்

## குறிப்பறிதல்

கூறாமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்று
மாறாநீர் வையக் கணி. ௧
ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல். ௨
குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல். ௩
குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை
யுறுப்போ ரனையரால் வேறு. ௪
குறிப்பிற் குறிப்புணரா வாயி னுறுப்பினு
ளென்ன பயத்தவோ கண். ௫
அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம். ௬
முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங்
காயினுந் தான்முந் துறும். ௭
முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி
யுற்ற துணர்வார்ப் பெறின். ௮
பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின்
வகைமை யுணர்வார்ப் பெறின். ௯

நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற்
கண்ணல்ல தில்லை பிற. ௰

௭௧

அங்கவியல் அதி. ௭௨ திருக்குறள்

## அவையறிதல்

அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
றொகையறிந்த தூய்மை யவர். ௧
இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லி
னடைதெரிந்த நன்மை யவர். ௨
அவையறியார் சொல்லன்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉ மில். ௩
ஒளியார்முன் னொள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல். ௪
நன்றென்ற வற்றுள்ளு நன்றே முதுவருண்
முந்து கிளவாச் செறிவு. ௫
ஆற்றி னிலைதளர்ந் தற்றே வியன்புல
மேற்றுணர்வார் முன்ன ரிழுக்கு. ௬
கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து. ௭
உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன்
பாத்தியு ணீர்சொரிந் தற்று. ௮
புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையு
ணன்கு செலச்சொல்லு வார். ௯
அங்கணத்து ளுக்க வமிழ்தற்றாற் றங்கணத்த
ரல்லார்முற் கோட்டி கொளல். ௰

௭௨

பொருள் அதி. ௭௩ அங்கவியல்

## அவையஞ்சாமை

வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
றொகையறிந்த தூய்மை யவர். ௧
கற்றாருட் கற்றா ரெனப்படுவர் கற்றார்முற்
கற்ற செலச்சொல்லு வார். ௨
பகையகத்துச் சாவா ரெளிய ரரிய
ரவையகத் தஞ்சா தவர். ௩
கற்றார்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல். ௪

ஆற்றி னளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு. ரு

வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு நூலொடெ
னுண்ணவை யஞ்சு பவர்க்கு. சு

பகையகத்துப் பேடிகை யொள்வா ளவையகத்
தஞ்சு மவன்கற்ற நூல். எ

பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையு
ணன்கு செலச்சொல்லா தார். அ

கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
நல்லா ரவையஞ்சு வார். கூ

உளரெனினு மில்லாரொ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார். ய





## நாடு

தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு. க

பெரும்பொருளாற் பெட்டக்க தாகி யருங்கேட்டா
லாற்ற விளைவது நாடு. உ

பொறையொருங்கு மேல்வருங்காற் றாங்கி யிறைவற்
கிறையொருங்கு நேர்வது நாடு. ௩

உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு. ச

பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங்
கொல்குறும்பு மில்லது நாடு. ரு

கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டிற் றலை. சு

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு. எ

பிணியின்மை செல்வம் விளைவின்ப மேம
மணியென்ப நாட்டிற்கிவ் வைந்து. அ

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு. கூ

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு. ய

## அரண்

ஆற்று பவர்க்கு மரண்பொரு ளஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள். ௧
மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண். ௨
உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கி
னமைவர ணென்றுரைக்கு நூல். ௩
சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை
யூக்க மழிப்ப தரண். ௪
கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார்
நிலைக்கெளிதா நீர தரண். ௫
எல்லாப் பொருளு முடைத்தா யிடத்துதவு
நல்லா ளுடைய தரண். ௬
முற்றியு முற்றா தெறிந்து மறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண். ௭
முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வ தரண். ௮
முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண். ௯
எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்ல தரண். ௰

௭௫

அங்கவியல் அதி. ௭௬ திருக்குறள்

## பொருள்செயல்வகை

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். ௧
இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு. ௨
பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு
மெண்ணிய தேயத்துச் சென்று. ௩
அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். ௪
அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல். ௫
உறுபொருளு முல்கு பொருளுந்தன் னொன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள். ௬

அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு. ௭
குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை. ௮
செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு
மெஃகதனிற் கூரிய தில். ௯
ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொரு
ளேனை யிரண்டு மொருங்கு. ௰

௭௬

பொருள் அதி. ௭௭ அங்கவியல்

## படைமாட்சி

உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலை. ௧
உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துத்
தொல்படைக் கல்லா லரிது. ௨
ஒலித்தக்கா லென்னா முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும். ௩
அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை. ௪
கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு
மாற்ற லதுவே படை. ௫
மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற
மெனநான்கே யேமம் படைக்கு. ௬
தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து. ௭
அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானை
படைத்தகையாற் பாடு பெறும். ௮
சிறுமையுஞ் செல்லாத் துனியும் வறுமையு
மில்லாயின் வெல்லும் படை. ௯
நிலைமக்கள் சால வுடைத்தெனினுந் தானை
தலைமக்க ளில்வழி யில். ௰

௭௭

அங்கவியல் அதி. ௭௮ திருக்குறள்

## படைச்செருக்கு

என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை

முன்னின் று கன்னின் றவர். க
கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்த லினிது. உ
பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கா
லூராண்மை மற்றத னெஃகு. ங
கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். ச
விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி
னோட்டன்றோ வன்க ணவர்க்கு. ரு
விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாளை யெடுத்து. சா
சுழலு மிசைவேண்டி வேண்டா வுயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து. எ
உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்
செறினுஞ்சீர் குன்ற லிலர். அ
இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர். கூ
புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து. ம

எஅ

பொருள் அதி. எகூ அங்கவியல்

## நட்பு

செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு. க
நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு. உ
நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு. ங
நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு. ச
புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
னட்பாங் கிழமை தரும். ரு
முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு. சா
அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க
ணல்ல லுழப்பதா நட்பு. எ
உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே

யிடுக்கண் களைவதா நட்பு. ௮
நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
யொல்லும்வா யூன்று நிலை. ௯
இனைய ரிவரெமக் கின்னம்யா மென்று
புனையினும் புல்லென்னு நட்பு. ௰

௭௯

அங்கவியல் அதி. ௮௰ திருக்குறள்

## நட்பாராய்தல்

நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு. ௧
ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும். ௨
குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா
வினனு மறிந்தியாக்க நட்பு. ௩
குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு. ௪
அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய
வல்லார்கட் பாய்ந்து கொளல். ௫
கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல். ௬
ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல். ௭
உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க
வல்லற்க ணாற்றறுப்பார் நட்பு. ௮
கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை
யுள்ளினு முள்ளஞ் சுடும். ௯
மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்து
மொருவுக வொப்பிலார் நட்பு. ௰

௮௰

பொருள் அதி. ௮௧ அங்கவியல்

## பழைமை

பழைமை யெனப்படுவ தியாதெனின் யாதுங்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு. ௧
நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்
குப்பாத லான்றோர் கடன். ௨
பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை. ௩

விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின். ௪
பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின். ௫
எல்லைக்க ணின்றார் துறவார் தொலைவிடத்துந்
தொல்லைக்க ணின்றார் தொடர்பு. ௬
அழிவந்த செய்யினு மன்பறா ரன்பின்
வழிவந்த கேண்மை யவர். ௭
கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்க நட்டார் செயின். ௮
கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையு முலகு. ௯
விழையார் விழையப் படுப பழையார்கட்
பண்பிற் றலைப்பிரியா தார். ௰

௮௧

**அங்கவியல்** அதி. ௮௨ திருக்குறள்

## தீநட்பு

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்ற லினிது. ௧
உறினட் டறினொரூஉ மொப்பிலார் கேண்மை
பெறினு மிழப்பினு மென். ௨
உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது
கொள்வாருங் கள்வரு நேர். ௩
அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா வன்னார்
தமரிற் றனிமை தலை. ௪
செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
யெய்தலி னெய்தாமை நன்று. ௫
பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையா
ரேதின்மை கோடி யுறும். ௬
நகைவகைய ராகிய நட்பிற் பகைவராற்
பத்தடுத்த கோடி யுறும். ௭
ஒல்லுங் கரும முடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல். ௮
கனவினு மின்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. ௯
எனைத்துங் குறுகுத லோம்பன் மனைக்கெழீஇ

மன்றிற் பழிப்பார் தொடர்பு. ௰

௮௨



## கூடாநட்பு

சீரிடங் காணி னெறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு. ௧
இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும். ௨
பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல
ராகுத னாணார்க் கரிது. ௩
முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா
வஞ்சரை யஞ்சப் படும். ௪
மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றுஞ்
சொல்லினாற் றேறற்பாற் றன்று. ௫
நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ
லொல்லை யுணரப் படும். ௬
சொல்வணக்க மொன்னார்கட் கொள்ளற்க வில்வணக்கந்
தீங்கு குறித்தமை யான். ௭
தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னா
ரழுதகண் ணீரு மனைத்து. ௮
மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுட் சாப்புல்லற் பாற்று. ௯
பகைநட்பாங் காலம் வருங்கான் முகநட்
டகநட் பொரீஇ விடல். ௰

௮௩



## பேதைமை

பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண்
டூதியம் போக விடல். ௧
பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல். ௨
நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில். ௩

ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில். ௪

ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந்
தான்புக் கழுந்து மளறு. ௫

பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின். ௬

ஏதிலா ராரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வ முற்றக் கடை. ௭

மைய லொருவன் களித்தற்றாற் பேதைதன்
கையொன் றுடைமை பெறின். ௮

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
பீழை தருவதொன் றில். ௯

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல். ௰



## புல்லறிவாண்மை

அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை
யின்மையா வையா துலகு. ௧

அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாது
மில்லை பெறுவான் றவம். ௨

அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது. ௩

வெண்மை யெனப்படுவ தியாதெனி னொண்மை
யுடையம்யா மென்னுஞ் செருக்கு. ௪

கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉ மையந் தரும். ௫

அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற்
குற்ற மறையா வழி. ௬

அருமறை சோரு மறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு. ௭

ஏவவுஞ் செய்கலான் றான்றேறா னவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய். ௮

காணாதாற் காட்டுவான் றான்காணான் காணாதான்
கண்டானாந் தான்கண்ட வாறு. ௯

உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும். ௰

## இகல்

இகலென்ப வெல்லா வுயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கு நோய். ௧
பகல்கருதிப் பற்றா செயினு மிகல்கருதி
யின்னாசெய் யாமை தலை. ௨
இகலென்னு மெவ்வநோய் நீக்கிற் றவலில்லாத்
தாவில் விளக்கந் தரும். ௩
இன்பத்து ளின்பம் பயக்கு மிகலென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின். ௪
இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர். ௫
இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலு நணித்து. ௬
மிகன்மேவல் மெய்ப்பொருள் காணா ரிகன்மேவ
லின்னா வறிவி னவர். ௭
இகலிற் கெதிர்சாய்த லாக்க மதனை
மிகலூக்கி னூக்குமாங் கேடு. ௮
இகல்காணா னாக்கம் வருங்கா லதனை
மிகல்காணுங் கேடு தரற்கு. ௯
இகலானா மின்னாத வெல்லா நகலானா
நன்னய மென்னுஞ் செருக்கு. ௰





## பகைமாட்சி

வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேன் மேக பகை. ௧
அன்பில னான்ற துணையிலன் றான்றுவ்வா
னென்பரியு மேதிலான் றுப்பு. ௨
அஞ்சு மறியா னமைவில னீகலான்
றஞ்ச மெளியன் பகைக்கு. ௩
நீங்கான் வெகுளி நிறையில னெஞ்ஞான்றும்

யாங்கணும் யார்க்கு மெளிது. ௪
வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது. ௫
காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும். ௬
கொடுத்துங் கொளல்வேண்டு மன்ற வடுத்திருந்து
மாணாத செய்வான் பகை. ௭
குணனிலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்
கினனிலனா மேமாப் புடைத்து. ௮
செறுவார்க்குச் சேணிகவா வின்ப மறிவிலா
வஞ்சும் பகைவர்ப் பெறின். ௯
கல்லான் வெகுளுஞ் சிறுபொரு ளெஞ்ஞான்று
மொல்லானை யொல்லா தொளி. ௰



# பகைத்திறந்தெரிதல்

பகையென்னும் பண்பி லதனை யொருவ
னகையேயும் வேண்டற்பாற் றன்று. ௧
வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை. ௨
ஏமுற் றவரினு மேழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன். ௩
பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
றகைமைக்கட் டங்கிற் றுலகு. ௪
தன்றுணை யின்றாற் பகையிரண் டாற் றானொருவ
னின்றுணை யாக் கொள்கவற்றி னொன்று. ௫
தேறினுந் தேறா விடினு மழிவின்கட்
டேறான் பகாஅன் விடல். ௬
நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து. ௭
வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு. ௮
இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து. ௯
உயிர்ப்ப வுளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார். ௰

## உட்பகை

நிழனீரு மின்னாத வின்னா தமர்நீரு
மின்னாவா மின்னா செயின். ௧
வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. ௨
உட்பகை யஞ்சித்தற் காக்க வுலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும். ௩
மனமாணா வுட்பகை தோன்றி னினமாணா
வேதம் பலவுந் தரும். ௪
உறன்முறையா னுட்பகை தோன்றி னிறன்முறையா
னேதம் பலவுந் தரும். ௫
ஒன்றாமை யொன்றியார் கட்படி னெஞ்ஞான்றும்
பொன்றாமை யொன்ற லரிது. ௬
செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே
யுட்பகை யுற்ற குடி. ௭
அரம்பொருத பொன்போலத் தேயு முரம்பொரு
துட்பகை யுற்ற குடி. ௮
எட்பக வன்ன சிறுமைத்தே யாயினு
முட்பகை யுள்ளதாங் கேடு. ௯
உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று. ௰

அங்கவியல் அதி. ௯௰ திருக்குறள்

## பெரியாரைப்பிழையாமை

ஆற்றுவா ராற்ற லிகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை. ௧
பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாராற்
பேரா விடும்பை தரும். ௨
கெடல்வேண்டிற் கேளாது செய்க வடல்வேண்டி
னாற்று பவர்க ணிழுக்கு. ௩
கூற்றத்தைக் கையால் விளித்தற்றா லாற்றுவார்க்
காற்றாதா ரின்னா செயல். ௪
யாண்டுச்சென் றியாண்டு முளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர். ௫
எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார். ௬

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்னாந்
தகைமாண்ட தக்கார் செறின். ௭

குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து. ௮

ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும். ௯

இறந்தமைந்த சார்புடைய ராயினு முய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின். ௰

௯௰

பொருள் அதி. ௯௧ அங்கவியல்

## பெண்வழிச்சேறல்

மனைவிழைவார் மாண்பய னெய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளு மது. ௧

பேணாது பெண்விழைவா னாக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும். ௨

இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்று
நல்லாரு ணாணுத் தரும். ௩

மனையாளை யஞ்சு மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்த லின்று. ௪

இல்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று
நல்லார்க்கு நல்ல செயல். ௫

இமையாரின் வாழினும் பாடிலரே யில்லா
ளமையார்தோ ளஞ்சு பவர். ௬

பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி னாணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து. ௭

நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங் கொழுகு பவர். ௮

அறவினையு மான்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்க ணில். ௯

எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில். ௰

அங்கவியல் அதி. ௯௨ திருக்குறள்

## வரைவின்மகளிர்

அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியா
ரின்சொ லிழுக்குத் தரும். க
பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்றூக்கி நள்ளா விடல். உ
பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி
லேதில் பிணந்தழீஇ யற்று. ௩
பொருட்பொருளார் புன்னலந் தோயா ரருட்பொரு
ளாயு மறிவி னவர். ௪
பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்
மாண்ட வறிவி னவர். ௫
தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள். ௬
நிறைநெஞ்ச மில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள். ௭
ஆயு மறிவின ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு. ௮
வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்க ளாழு மளறு. ௯
இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந்
திருநீக்கப் பட்டார் தொடர்பு. ௰

பொருள் அதி. ௯௨ அங்கவியல்

## கள்ளுண்ணாமை

உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார். க
உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரா
னெண்ணப் படவேண்டா தார். உ
ஈன்றாண் முகத்தேயு மின்னாதா லென்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி. ௩
நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு. ௪
கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல். ௫
துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். ௬
உள்ளொற்றி யுள்ளூரார் நகப்படுவ ரெஞ்ஞான்றுங்
கள்ளொற்றிக் கண்சாய் பவர். ௭

களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும். ௮
களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று. ௯
கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கா
லுள்ளான்கொ லுண்டதன் சோர்வு. ௰



## சூது

வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. ௧
ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ
லன்றெய்தி வாழ்வதோ ராறு. ௨
உருளாய மோவாது கூறிற் பொருளாயம்
போஒய்ப் புறமே படும். ௩
சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில். ௪
கவறுங் கழகமுங் கையுந் தருக்கி
யிவறியா ரில்லாகி யார். ௫
அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்னு
முகடியான் மூடப்பட் டார். ௬
பழகிய செல்வமும் பண்புங் கெடுக்குங்
கழகத்துக் காலை புகின். ௭
பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ யருள்கெடுத்
தல்ல லுழப்பிக்குஞ் சூது. ௮
உடைசெல்வ மூணொளி கல்வியென் றைந்து
மடையாவா மாயங் கொளின். ௯
இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோற் றுன்ப
முழத்தொறூஉங் காதற் றுயிர். ௰





## மருந்து

மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று. ௧

மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின். ௨

அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்கு மாறு. ௩

அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து. ௪

மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி
னூறுபா டில்லை யுயிர்க்கு. ௫

இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங்
கழிபே ரிரையான்க ணோய். ௬

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணி
னோயள வின்றிப் படும். ௭

நோய்நாடி நோய்முத னாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். ௮

உற்றா னளவும் பிணியளவுங் காலமுங்
கற்றான் கருதிச் செயல். ௯

உற்றவன் றீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்



## குடிமை

இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச்
செப்பமு நாணு மொருங்கு. ௧

ஒழுக்கமும் வாய்மையு நாணுமிம் மூன்று
மிழுக்கார் குடிப்பிறந் தார். ௨

நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு. ௩

அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்த லிலர். ௪

வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று. ௫

சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார். ௬

குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து. ௭

நலத்தின்க ணாரின்மை தோன்றி னவனைக்
குலத்தின்க ணையப் படும். ௮

நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டும்

குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல். ௯
நலம்வேண்டி னாணுடைமை வேண்டுங் குலம்வேண்டின்



## மானம்

இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல். ௧
சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர். ௨
பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டு முயர்வு. ௩
தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை. ௪
குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின். ௫
புகழின்றாற் புத்தேணாட் டுய்யாதா லென்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை. ௬
ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலி னந்நிலையே
கெட்டா னெனப்படுத னன்று. ௭
மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து. ௮
மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னா
ருயிர்நீப்பர் மானம் வரின். ௯
இளிவரின் வாழாத மான முடையா
ரொளிதொழு தேத்து முலகு. ௰



## பெருமை

ஒளியொருவற் குள்ள வெறுக்கை யிளியொருவற்
கஃதிறந்து வாழ்து மெனல். ௧
பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். ௨
மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர். ௩
ஒருமை மகளிரே போலப் பெருமையுந்

தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு. ௪
பெருமை யுடையவ ராற்றுவா ராற்றி
னருமை யுடைய செயல். ௫
சிறியா ருணர்ச்சியு ளில்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னு நோக்கு. ௬
இறப்பே புரிந்த தொழிற்றாஞ் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின். ௭
பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து. ௮
பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல். ௯
அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும். ௰

பொருள் அதி. ௯௮ ஒழிபியல்

## சான்றாண்மை

கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு. ௧
குணநலஞ் சான்றோர் நலனே பிறநல
மெந்நலத் துள்ளதூஉ மன்று. ௨
அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண். ௩
கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. ௪
ஆற்றுவா ராற்றல் பணித லதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை. ௫
சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல். ௬
இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு. ௭
இன்மை யொருவற் கிளிவன்று சால்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின். ௮
ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார். ௯
சான்றவர் சான்றாண்மை குன்றி னிருநிலந்தான்

## பண்புடைமை

எண்பதத்தா லெய்த லெளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு. க
அன்புடைமை யான்ற குடிப்பிறத்த லிவ்விரண்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு. உ
உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்த லொப்பதா மொப்பு. ங
நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு. ச
நகையுள்ளு மின்னா திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு. ரு
பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன். சு
அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். எ
நண்பாற்ற ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்ற ராதல் கடை. அ
நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள். கூ
பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று. ய

பொருள் அதி ௱க ஒழிபியல்

## நன்றியில்செல்வம்

வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில். க
பொருளானா மெல்லாமென் றீயா திவறும்
மருளானா மாணாப் பிறப்பு.

ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்
தோற்ற நிலக்குப் பொறை.

எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ வொருவற்கும்
நச்சப் படாஅ தவன். ச
கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினு மில். ரு
ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் றக்கார்க்
கொன்றீத லியல்பிலா தான். சு
அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வ மிகநலம்
பெற்றாள் றமியள்மூத் தற்று. எ

நச்சப் படாதவன் செல்வ நடுவூரு
ணச்சு மரம்பழுத் தற்று. ௮
அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
வொண்பொருள் கொள்வார் பிறர். ௯
சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து. ௰

ஒழிபியல் அதி. ௱௨ திருக்குறள்

## நாணுடைமை

கருமத்தா னாணுத னாணுத் திருநுத
னல்லவர் நாணுப் பிற. ௧
ஊணுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு. ௨
ஊனைக் குறித்த வுயிரெல்லா நாணென்னு
நன்மை குறித்தது சால்பு. ௩
அணியன்றோ நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேற்
பிணியன்றோ பீடு நடை. ௪
பிறர்பழியுந் தம்பழியு நாணுவார் நாணுக்
குறைபதி யென்னு முலகு. ௫
நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர். ௬
நாணா லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா
னாண்டுறவார் நாணாள் பவர். ௭
பிறர்நாணத் தக்கது தானாணா னாயி
னறநாணத் தக்க துடைத்து. ௮
குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னலஞ்சுடு
நாணின்மை நின்றக் கடை. ௯
நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாணா லுயிர்மருட்டி யற்று. ௰

பொருள் அதி. ௱௩ ஒழிபியல்

## குடிசெயல்வகை

கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில். ௧
ஆள்வினையு மான்ற வறிவு மெனவிரண்டி
னீள்வினையா னீளுங் குடி. ௨
குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும். ௩
சூழாமற் றானே முடிவெய்துந் தங்குடியைத்

தாழா துஞற்று பவர்க்கு. ௪
குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்று முலகு. ௫
நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
வில்லாண்மை யாக்கிக் கொளல். ௬
அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்து
மாற்றுவார் மேற்றே பொறை. ௭
குடிசெய்வார்க் கில்லை பருவ மடிசெய்து
மானங் கருதக் கெடும். ௮
இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்ற மறைப்பா னுடம்பு. ௯
இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்று
நல்லா ளிலாத குடி. ௰

ஒழிபியல் அதி. ௱௩ திருக்குறள்

## உழவு

சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனா
லுழந்து முழவே தலை. ௧
உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து. ௨
உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர். ௩
பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்ப
ரலகுடை நீழ லவர். ௪
இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர். ௫
உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை. ௬
தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும். ௭
ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபி
னீரினு நன்றதன் காப்பு. ௮
செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும். ௯
இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி
னிலமென்னு நல்லா ணகும். ௰

பொருள் அதி. ௱௪ ஒழிபியல்

## நல்குரவு

இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி
னின்மையே யின்னா தது. ௧
இன்மை யெனவொரு பாவி மறுமையு
மிம்மையு மின்றி வரும். ௨
தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குர வென்னு நசை. ௩
இற்பிறந்தார் கண்ணேயு மின்மை யிளிவந்த
சொற்பிறக்குஞ் சோர்வு தரும். ௪
நல்குர வென்னு மிடும்பையுட் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும். ௫
நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். ௬
அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும். ௭
இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றது போலு நிரப்பு. ௮
நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது. ௯
துப்புர வில்லார் துவரத் துறவாமை
யுப்பிற்குங் காடிக்குங் கூற்று. ௰



## இரவு

இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பி
னவர்பழி தம்பழி யன்று. ௧
இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை
துன்ப முறாஅ வரின். ௨
கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்
றிரப்புமோ ரேஎ ருடைத்து. ௩
இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றாதார் மாட்டு. ௪
கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின்
றிரப்பவர் மேற்கொள் வது. ௫
கரப்பிடும்பை யில்லாரைக் காணி னிரப்பிடும்பை
யெல்லா மொருங்கு கெடும். ௬

இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ள
முள்ளு ளுவப்ப துடைத்து. ௭
இரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞால
மரப்பாவை சென்றுவந் தற்று. ௮
ஈவார்க ணென்னுண்டாந் தோற்ற மிரந்துகோள்
மேவா ரிலாஅக் கடை. ௯
இரப்பான் வெகுளாமை வேண்டு மிடும்பை
தானேயுஞ் சாலுங் கரி. ௰

பொருள் அதி. ௱௭ ஒழிபியல்

## இரவச்சம்

கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணு
மிரவாமை கோடி யுறும். ௧
இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான். ௨
இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில். ௩
இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக்
காலு மிரவொல்லாச் சால்பு.
தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த
துண்ணலி னூங்கினிய தில். ௫
ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில். ௬
இரப்ப னிரப்பாரை யெல்லா மிரப்பிற்
கரப்பா ரிரவன்மி னென்று. ௭
இரவென்னு மேமாப்பி றோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும். ௮
இரவுள்ள வுள்ள முருகுங் கரவுள்ள
வுள்ளதூஉ மின்றிக் கெடும். ௯
கரப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ விரப்பவர்
சொல்லாடப் போஒ முயிர். ௰

ஒழிபியல் அதி. ௱௮ திருக்குறள்

## கயமை

மக்களே போல்வர் கயவ ரவரன்ன
வொப்பாரி யாங்கண்ட தில். ௧
நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர். ௨

தேவ ரனையர் கயவ ரவருந்தா
மேவன செய்தொழுக லான். ௩
அகப்பட்டி யாவாரைக் காணி னவரின்
மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ். ௪
அச்சமே கீழ்கள தாசார மெச்ச
மவாவுண்டே லுண்டாஞ் சிறிது. ௫
அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான். ௬
ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கைய ரல்லா தவர்க்கு. ௭
சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ். ௮
உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ். ௯
எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து. ௰

௱அ

# காமத்துப்பால்

அதி. ௱௯ களவியல்

## தகையணங்குறுத்தல்

அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் னெஞ்சு. ௧
நோக்கினா ணோக்கெதிர் நோக்குத றாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து. ௨
பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு. ௩
கண்டா ருயிருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப்
பேதைக் கமர்த்தன கண். ௪
கூற்றமோ கண்ணோ பிணையோ மடவர
னோக்கமிம் மூன்று முடைத்து. ௫
கொடும்புருவங் கோடா மறைப்பி னடுங்கஞர்

செய்யல மன்னிவள் கண். ௬

கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில். ௭

ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினு
ணண்ணாரு முட்குமென் பீடு. ௮

பிணையேர் மடநோக்கு நாணு முடையாட்
கணியெவனோ வேதில தந்து. ௯

உண்டார்க ணல்ல தடுநறாக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த லின்று. ௰



## குறிப்பறிதல்

இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து. ௧

கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற்
செம்பாக மன்று பெரிது. ௨

நோக்கினா ணோக்கி யிறைஞ்சினா ளஃதவள்
யாப்பினு ளட்டிய நீர். ௩

யானோக்குங் காலை நிலனோக்கு நோக்காக்காற்
றானோக்கி மெல்ல நகும். ௪

குறிக்கொண்டு நோக்காமை யல்லா லொருகண்
சிறக்கணித்தாள் போல நகும். ௫

உறாஅ தவர்போற் சொலினுஞ் செறாஅர்சொ
லொல்லை யுணரப் படும். ௬

செறாஅச் சிறுசொல்லுஞ் செற்றார்போ னோக்கு
முறாஅர்போன் றுற்றார் குறிப்பு. ௭

அசையியற் குண்டாண்டோ ரேஎர்யா னோக்கப்
பசையினள் பைய நகும். ௮

ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள. ௯

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
ளென்ன பயனு மில. ௰



## புணர்ச்சிமகிழ்தல்

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள. ௧

பிணிக்கு மருந்து பிறம னணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து. ௨

தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொ
றாமரைக் கண்ணா னுலகு. ௩

நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்றா ளிவள். ௪

வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினா டோள். ௫

உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள். ௬

தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றா
லம்மா வரிவை முயக்கு. ௭

வீழு மிருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு. ௮

ஊட லுணர்தல் புணர்த லிவைகாமங்
கூடியார் பெற்ற பயன். ௯

அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு. ௰





## நலம்புனைந்துரைத்தல்

நன்னீரை வாழி யனிச்சமே நின்னினு
மென்னீரள் யாம்வீழ் பவள். ௧

மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று. ௨

முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு. ௩

காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கு
மாணிழை கண்ணொவ்வே மென்று. ௪

அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா ணுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை. ௫

மதியு மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன். ௬

அறுவாய் நிறைந்த வவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து. ௭

மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற்
காதலை வாழி மதி. ௮

மலரன்ன கண்ணாண் முகமொத்தி யாயிற்
பலர்காணத் தோன்றன் மதி. ௯

அனிச்சமு மன்னத்தின் றூவியு மாத
ரடிக்கு நெருஞ்சிப் பழம். ௰

௧௧௨.

காமம் அதி. ௧௧௩ களவியல்

## காதற்சிறப்புரைத்தல்

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர். ௧

உடம்பொ டுயிரிடை யென்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு. ௨

கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழுந்
திருநுதற் கில்லை யிடம். ௩

வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாத
லதற்கன்ன ணீங்கு மிடத்து. ௪

உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியே
னொள்ளமர்க் கண்ணாள் குணம். ௫

கண்ணுள்ளிற் போகா ரிமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காத லவர். ௬

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணு
மெழுதேங் கரப்பாக் கறிந்து. ௭

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்ட
லஞ்சுதும் வேபாக் கறிந்து. ௮

இமைப்பிற் கரப்பாக் கறிவ லனைத்திற்கே
யேதில ரென்னுமிவ் வூர். ௯

உவந்துறைவ ருள்ளத்து ளென்று மிகந்துறைவ
ரேதில ரென்னுமிவ் வூர். ௰

௧௧௩.

களவியல் அதி. ௧௧௪ திருக்குறள்

## நாணுத்துறவுரைத்தல்

காம முழந்து வருந்தினார்க் கேம
மடலல்ல தில்லை வலி. ௧

நோனா வுடம்பு முயிரு மடலேறு

நாணினை நீக்கி நிறுத்து. ௨

நாணொடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன்
காமுற்றா ரேறு மடல். ௩

காமக் கடும்புன லுய்க்குமே நாணொடு
நல்லாண்மை யென்னும் புணை. ௪

தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை யுழக்குந் துயர். ௫

மடலூர்தல் யாமத்து முள்ளுவேன் மன்ற
படலொல்லா பேதைக்கென் கண். ௬

கடலன்ன காம முழந்து மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில். ௭

நிறையரியர் மன்னளிய ரென்னாது காம
மறையிறந்து மன்று படும். ௮

அறிகிலா ரெல்லாரு மென்றேஎன் காம
மறுகின் மறுகு மருண்டு. ௯

யாங்கண்ணிற் காண நகுப வறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு. ௰



## அலரறிவுறுத்தல்

அலரெழ வாருயிர் நிற்கு மதனைப்
பலரறியார் பாக்கியத் தால். ௧

மலரன்ன கண்ணா ளருமை யறியா
தலரெமக் கீந்ததிவ் வூர். ௨

உறாஅதோ வூரறிந்த கௌவை யதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து. ௩

கவ்வையாற் கவ்விது காம மதுவின்றேற்
றவ்வென்னுந் தன்மை யிழந்து. ௪

களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம்
வெளிப்படுந் தோறு மினிது. ௫

கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று. ௬

ஊரவர் கௌவை யெருவாக வன்னைசொன்
னீராக நீளுமிந் நோய். ௭

நெய்யா லெரிநுதுப்பே மென்றற்றாற் கௌவையாற்
காம நுதுப்பே மெனல். ௮

அலர்நாண வொல்வதோ வஞ்சலோம் பென்றார்
பலர்நாண நீத்தக் கடை. ௯
தாம்வேண்டி னல்குவர் காதலர் யாம்வேண்டுங்
கௌவை யெடுக்குமிவ் வூர். ௰

**கற்பியல் அதி. ௧௧௬ திருக்குறள்**

## பிரிவாற்றாமை

செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை. ௧
இன்க ணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்க ணுடைத்தாற் புணர்வு. ௧
அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான். ௩
அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற்
றேறியார்க் குண்டோ தவறு. ௪
ஓம்பி னமைந்தார் பிரிவோம்பன் மற்றவர்
நீங்கி னரிதாற் புணர்வு. ௫
பிரிவுரைக்கும் வன்கண்ண ராயி னரிதவர்
நல்குவ ரென்னு நசை. ௬
துறைவன் றுறந்தமை தூற்றாகொன் முன்கை
யிறையிறவா நின்ற வளை. ௭
இன்னா தினனில்லூர் வாழ்த லதனினு
மின்னா தினியார்ப் பிரிவு. ௮
தொடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ தீ. ௯
அரிதாற்றி யல்லனோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர். ௰

**காமம் அதி. ௧௧௭ கற்பியல்**

## படர்மெலிந்திரங்கல்

மறைப்பேன்மன் யானிஃதோ நோயை யிறைப்பவர்க்
கூற்றுநீர் போல மிகும். ௧
கரத்தலு மாற்றேனிந் நோயைநோ ய்செய்தார்க்
குரைத்தலு நாணுத் தரும். ௨
காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென
னோனா வுடம்பி னகத்து. ௩
காமக் கடன்மன்னு முண்டே யதுநீந்து

மேமப் புணைமன்னு மில். ௪

துப்பி னெவனாவர் மற்கொ றுயர்வரவு
நட்பினு ளாற்று பவர். ௫

இன்பங் கடன்மற்றுக் காம மஃதடுங்காற்
றுன்ப மதனிற் பெரிது. ௬

காமக் கடும்புன னீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளேன். ௭

மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா
வென்னல்ல தில்லை துணை. ௮

கொடியார் கொடுமையிற் றாங்கொடிய விந்நா
ணெடிய கழியு மிரா. ௯

உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோவென் கண் ௰



## கண்விதுப்பழிதல்

கண்டாங் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாங்காட்ட யாங்கண் டது. ௧

தெரிந்துணரா நோக்கிய வுண்கண் பரிந்துணராப்
பைத லுழப்ப தெவன். ௨

கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழு
மிதுநகத் தக்க துடைத்து. ௩

பெயலாற்றா நீருலந்த வுண்க ணுயலாற்றா
வுய்வினோ யென்க ணிறுத்து. ௪

படலாற்றா பைத லுழக்குங் கடலாற்றாக்
காமநோய் செய்தவென் கண். ௫

ஓஒ வினிதே யெமக்கிந்நோய் செய்தகண்
டாஅ மிதற்பட் டது. ௬

உழந்துழந் துண்ணீ ரறுக விழைந்திழைந்து
வேண்டி யவர்க்கண்ட கண். ௭

பேணாது பெட்டா ருளர்மன்னோ மற்றவர்க்
காணா தமைவில கண். ௮

வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
யாரஞ ருற்றன கண். ௯

மறைபெற லூரார்க் கரிதன்றா லெம்போ
லறைபறை கண்ணா ரகத்து. ௰

# பசப்புறுபருவரல்

நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்
பண்பியார்க் குரைக்கோ பிற. ௧
அவர்தந்தா ரென்னுந் தகையா லிவர்தந்தென்
மேனிமே லூரும் பசப்பு. ௨
சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையுந் தந்து. ௩
உள்ளுவன் மன்யா னுரைப்ப தவர்திறமாற்
கள்ளம் பிறவோ பசப்பு. ௪
உவக்காணெங் காதலர் செல்வா ரிவக்காணென்
மேனிப் பசப்பூர் வது. ௫
விளக்கற்றம் பார்க்கு மிருளேபோற் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு. ௬
புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவி
லள்ளிக்கொள் வற்றே பசப்பு. ௭
பசந்தா ளிவளென்ப தல்லா லிவளைத்
துறந்தா ரவரென்பா ரில். ௮
பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நன்னிலைய ராவ ரெனின். ௯
பசப்பெனப் பேர்பெறுத னன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றா ரெனின். ௰

௧௧௯



# தனிப்படர்மிகுதி

தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி. ௧
வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வா ரளிக்கு மளி. ௨
வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே
வாழுந மென்னுஞ் செருக்கு. ௩
வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅ ரெனின். ௪
நாங்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாங்காதல் கொள்ளாக் கடை. ௫
ஒருதலையா னின்னாது காமங்காப் போல
விருதலை யானு மினிது. ௬

பருவரலும் பைதலுங் காணான்கொல் காம
னொருவர்க ணின்றொழுகு வான். ௭
வீழ்வாரி னின்சொற் பெறாஅ துலகத்து
வாழ்வாரின் வன்கணா ரில். ௮
நசைஇயார் நல்கா ரெனினு மவர்மாட்
டிசையு மினிய செவிக்கு. ௯
உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு. ௰

௧௨௰

காமம் அதி. ௧௨௧ கற்பியல்

## நினைந்தவர் புலம்பல்

உள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காம மினிது. ௧
எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில். ௨
நினைப்பவர் போன்று நினையார்கொ றும்மல்
சினைப்பது போன்று கெடும். ௩
யாமு முளேங்கொ லவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்
தோஒ வுளரே யவர். ௪
தந்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணார்கொ
லெந்நெஞ்சத் தோவா வரல். ௫
மற்றியா னென்னுளேன் மன்னோ வவரொடியா
னுற்றநா ளுள்ள வுளேன். ௬
மறப்பி னெவனாவன் மற்கொல் மறப்பறியே
னுள்ளினு முள்ளஞ் சுடும். ௭
எனைத்து நினைப்பினுங் காயா ரனைத்தன்றோ
காதலர் செய்யுஞ் சிறப்பு. ௮
விளியுமெ னின்னுயிர் வேறல்ல மென்பா
ரளியின்மை யாற்ற நினைந்து. ௯
விடாஅது சென்றாரைக் கண்ணினாற் காணப்
படாஅதி வாழி மதி. ௰

௧௨௧

கற்பியல் அதி. ௧௨௨ திருக்குறள்

## கனவுநிலையுரைத்தல்

காதலர் தூதொடு வந்த கனவினுக்

யாதுசெய் வேன்கொல் விருந்து. க
கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்
குயலுண்மை சாற்றுவேன் மன். உ
நனவினா னல்கா தவரைக் கனவினாற்
காண்டலி னுண்டென் னுயிர். ங
கனவினா னுண்டாகுங் காம நனவினா
னல்காரை நாடித் தரற்கு. ச
நனவினாற் கண்டதூஉ மாங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே யினிது. ரு
நனவென வொன்றில்லை யாயிற் கனவினாற்
காதலர் நீங்கலர் மன். சு
நனவினா னல்காக் கொடியார் கனவினா
னென்னெம்மைப் பீழிப் பது. எ
துஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கா
னெஞ்சத்த ராவர் விரைந்து. அ
நனவினா னல்காரை நோவர் கனவினாற்
காதலர்க் காணா தவர். கூ
நனவினா னந்நீத்தா ரென்பர் கனவினாற்
காணார்கொ லிவ்வூ ரவர். ௰

கஉஉ

காமம் அதி. கஉங கற்பியல்

# பொழுதுகண்டிரங்கல்

மாலையோ வல்லை மணந்தா ருயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது. க
புன்கண்ணை வாழி மருண்மாலை யெங்கேள்போல்
வன்கண்ண தோநின் றுணை. உ
பனியரும்பிப் பைதல்கொண் மாலை துனியரும்பித்
துன்பம் வளர வரும். ங
காதல ரில்வழி மாலை கொலைக்களத்
தேதிலர் போல வரும். ச
காலைக்குச் செய்தநன் றென்கொ லெவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை. ரு
மாலைநோய் செய்தன் மணந்தா ரகலாத
காலை யறிந்த திலேன். சு
காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய். எ
அழல்போலு மாலைக்குத் தூதாகி யாயன்

குழல்போலுங் கொல்லும் படை. ௮
பதிமருண்டு பைத லுழக்கு மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து. ௯
பொருண்மாலை யாளரை யுள்ளி மருண்மாலை
மாயுமென் மாயா வுயிர். ௰

கஉ௩

கற்பியல் அதி. கஉ௪ திருக்குறள்

## உறுப்புநலனழிதல்

சிறுமை நமக்கொழியச் சேட்சென்றா ருள்ளி
நறுமலர் நாணின கண். ௧
நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாருங் கண். ௨
தணந்தமை சால வறிவிப்ப போலு
மணந்தநாள் வீங்கிய தோள். ௩
பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள். ௪
கொடியார் கொடுமை யுரைக்குந் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள். ௫
தொடியொடு தோணெகிழ நோவ லவரைக்
கொடியரெனக் கூற னொந்து. ௬
பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோட் பூச லுரைத்து. ௭
முயங்கிய கைகளை யூக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல். ௮
முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண். ௯
கண்ணின் பசப்போ பருவர லெய்தின்றே
யொண்ணுதல் செய்தது கண்டு. ௰

கஉ௪

காமம் அதி. கஉ௫ கற்பியல்

## நெஞ்சொடுகிளத்தல்

நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே யெனைத்தொன்று
மெவ்வநோய் தீர்க்கு மருந்து. ௧
காத லவரில ராகநீ நோவது
பேதைமை வாழியென் னெஞ்சு. ௨

இருந்துள்ளி யென்பரித னெஞ்சே பரிந்துள்ளல்
பைதனோய் செய்தார்க ணில். ௩
கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே யிவையென்னைத்
தின்னு மவர்க்காண லுற்று. ௪
செற்றா ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயா
முற்றா லுறாஅ தவர். ௫
கலந்துணர்த்துங் காதலர்க் கண்டாற் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்தியென் னெஞ்சு. ௬
காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேனிவ் விரண்டு. ௭
பரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதையென் னெஞ்சு. ௮
உள்ளத்தார் காத லவராக வுள்ளிநீ
யாருழைச் சேறியென் னெஞ்சு. ௯
துன்னாத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா
வின்னு மிழத்துங் கவின். ௰

௧௨௫



## நிறையழிதல்

காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னு
நாணுத்தாழ் வீழ்த்த கதவு. ௧
காம மெனவொன்றோ கண்ணின்றென் னெஞ்சத்தை
யாமத்து மாளுந் தொழில். ௨
மறைப்பேன்மற் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போற் றோன்றி விடும். ௩
நிறையுடையே னென்பேன்மன் யானோவென் காம
மறையிறந்து மன்று படும். ௪
செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோ
யுற்றா ரறிவதொன் றன்று. ௫
செற்றவர் பின்சேறல் வேண்டி யளித்தரோ
வெற்றென்னை யுற்ற துயர். ௬
நாணென வொன்றோ வறியலங் காமத்தாற்
பேணியார் பெட்ப செயின். ௭
பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை யுடைக்கும் படை. ௮
புலப்ப லெனச்சென்றேன் புல்லினே னெஞ்சங்

கலத்த லுறுவது கண்டு ௯
நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பே மெனல். ௰

௧௨௬



## அவர்வயின்விதும்பல்

வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல். ௧
இலங்கிழாய் இன்று மறப்பினென் றோண்மேற்
கலங்கழியுங் காரிகை நீத்து. ௨
உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்
வரனசைஇ யின்னு முளேன. ௩
கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொ டேறுமென் னெஞ்சு. ௪
காண்கமற் கொண்கனைக் கண்ணாரக் கண்டபி
னீங்குமென் மென்றோட் பசப்பு. ௫
வருகமற் கொண்க னொருநாட் பருகுவன்
பைதனோ யெல்லாங் கெட. ௬
புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின். ௭
வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை யயர்கம் விருந்து. ௮
ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு. ௯
பெறினென்னும் பெற்றக்கா லென்னு முறினென்னு
முள்ள முடைந்துக்கக் கால். ௰

௧௨௭



## குறிப்பறிவுறுத்தல்

கரப்பினுங் கையிகந் தொல்லாநின் னுண்க
ணுரைக்க லுறுவதொன் றுண்டு. ௧
கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது. ௨
மணியிற் றிகழ்தரு நூல்போன் மடந்தை
யணியிற் றிகழ்வதொன் றுண்டு. ௩
முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை

நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு. ௪
செறிதொடி செய்திறந்த கள்ள முறுதுயர்
தீர்க்கு மருந்தொன் றுடைத்து. ௫
பெரிதாற்றிப் பெட்பக் கலத்த லரிதாற்றி
யன்பின்மை சூழ்வ துடைத்து. ௬
தண்ணந் துறைவன் றணந்தமை நம்மினு
முன்ன முணர்ந்த வளை. ௭
நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமு
மெழுநாளே மேனி பசந்து. ௮
தொடிநோக்கி மென்றோளு நோக்கி யடிநோக்கி
யஃதாண் டவள்செய் தது. ௯
பெண்ணினாற் பெண்மை யுடைத்தென்ப கண்ணினாற்
காமநோய் சொல்லி யிரவு. ௰

கஉஅ



## புணர்ச்சிவிதும்பல்

உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு. ௧
தினைத்துணையு மூடாமை வேண்டும் பனைத்துணையுங்
காம நிறைய வரின். ௨
பேணாது பெட்பவே செய்யினுங் கொண்கனைக்
காணா தமையல கண். ௩
ஊடற்கட் சென்றேன்மற் றோழி யதுமறந்து
கூடற்கட் சென்றதென் னெஞ்சு. ௪
எழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோற் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து. ௫
காணுங்காற் காணேன் றவறாய காணாக்காற்
காணேன் றவறல் லவை. ௬
உய்த்த லறிந்து புனல்பாய் பவரேபோற்
பொய்த்த லறிந்தென் புலந்து.
இளித்தக்க வின்னா செயினுங் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு.
மலரினு மெல்லிது காமஞ் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்.

கண்ணிற் றுனிர்தே கலங்கினள் புல்லுத
லெண்ணினுர் தான்விதுப் புற்று.

கஉகூ

யல் அதி. கடும் திருக்குறள்

## நெஞ்சொடுபுலத்தல்

நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே
மக் காகா தது. க

அ தவர்க்கண்ட கண்ணு மவரைச்
ரஅரெனச் சேறியென் னெஞ்சு. உ

ட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ
ட்டாங் கவர்பின் செலல். ந

ியன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே
ிசெய்து துவ்வாய்காண் மற்று. ச

ரஅமை யஞ்சும் பெறிற்பிரி வஞ்சு
அ விடும்பைத்தென் னெஞ்சு. ரு

ியே யிருந்து நினைத்தக்கா லென்னைத்
ிய விருந்ததென் னெஞ்சு. சு

ணு மறந்தே னவர்மறக் கல்லாவென்
று மடநெஞ்சிற் பட்டு. எ

ளி ளிளிவாமென் றெண்ணி யவர்திற
ளு முயிர்க்காத னெஞ்சு. அ

ர்யத்திற் கியாரே துணையாவார் தாமுடைய
ஞ்சந் துணையல் வழி. கூ

நசந் தமரல்ல ரேதிலார் தாமுடைய
ஞ்சந் தமரல் வழி. ய

ாமம் அதி. கடுக கற்பியல்

## புலவி

புல்லா திராஅப் புலத்தை யவருறு
மல்லனோய் காண்கஞ் சிறிது. க

உப்பமைந் தற்றுற் புலவி யதுசிறிது
மிக்கற்று னீள விடல். உ

அலந்தாரை யல்லனோய் செய்தற்றுற் றம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல். ந

ஊடி யவரை யுணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று. ச

நலத்தகை நல்லவர்க் கேளர் புலத்தகை

பூவன்ன கண்ணா ரகத்து.
துனியும் புலவியு மில்லாயிற் காமங்
கனியுங் கருக்காயு மற்று.
ஊடலி னுண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொ லென்று.
நோத லெவன்மற்று நொந்தாரென் றஃதறியுங்
காதல ரில்லா வழி.
நீரு நிழல தினிதே புலவியும்
வீழுநர் கண்ணே யினிது.
ஊட லுணங்க விடுவாரோ டென்னெஞ்சங்
கூடுவே மென்ப தவா.

௧௩௧

ற்பியல் அதி. ௧௩௨ திருக்குறள்

## புலவி நுணுக்கம்

ண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு. ௧
டி யிருந்தேமாத் தும்மினார் யாந்தம்மை
வாழ் கென்பாக் கறிந்து. ௨
ாட்டுப்பூச் சூடினுங் காயு மொருத்தியைக்
ட்டிய சூடினீ ரென்று. ௩
ரினுங் காதல மென்றேனா வூடினாள்
ரினும் யாரினு மென்று. ௪
ம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனாக்
ண்ணிறை நீர்கொண் டனள். ௫
ள்ளினே னென்றேன்மற் றென்மறந்தீ ரென்றென்னைப்
லாள் புலத்தக் கனள். ௬
ழத்தினா டும்மினே னாக வழித்தழுதாள்
ருள்ளித் தும்மினீ ரென்று. ௭
ம்முச் செறுப்ப வழுதா ணுமருள்ள
ம்மை மறைத்திரோ வென்று. ௮
ன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீ
நீரா ராகுதி ரென்று. ௯
னைத்திருந்து நோக்கினுங் காயு மனைத்துநீர்
ருள்ளி நோக்கினீ ரென்று. ௰

௧௩௨.

## ஊடலுவகை

இல்லை தவறவர்க் காயினு மூடுதல்
வல்ல தவரளிக்கு மாறு. ௧
ஊடலிற் றோன்றுஞ் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும். ௨
புலத்தலிற் புத்தேணா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து. ௩
புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென்
னுள்ள முடைக்கும் படை. ௪
தவறில ராயினுந் தாம்வீழ்வார் மென்றோ
ளகறலி னாங்கொன் றுடைத்து. ௫
உணலினு முண்ட தறலினிது காமம்
புணர்தலி னூட லினிது. ௬
ஊடலிற் றோற்றவர் வென்றா ரதுமன்னுங்
கூடலிற் காணப் படும். ௭
ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலிற் றோன்றிய உப்பு. ௮
ஊடுக மன்னோ வொளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ விரா. ௯
ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின். ௰

# திருவள்ளுவமாலை

திருச்சிற்றம்பலம்

சிறப்புப்பாயிரமாகிய

## திருவள்ளுவமாலை

அசரீரி

திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டுருத்தகு நற்பலகை யொக்க-விருக்க
வுருத்திர சன்ம ரெனவுரைத்து வானி
லொருக்கவோ வென்றதோர் சொல். ௧

நாமகள்

நாடா முதனான் மறைநான் முகனாவிற்
பாடா விடைப்பா ரதம்பகர்ந்தேன்-கூடாரை
யெள்ளிய வென்றி யிலங்கிலைவேன் மாறபின்
வள்ளுவன் வாயதென் வாக்கு ௨

இறையனார்

என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினு
நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்க்-குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் றெய்வத் திருமலர்போன்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல். ௩

௧௰௫

திருவள்ளுவமாலை

உக்கிரப்பெருவழுதியார்

நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா
[நான்முகத்தோன்
றான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த - நூன்
[முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்க கேட்க செவி. ௪

கபிலர்

தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்-மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி. ௫

பரணர்

மாலுங் குறளாய் வளர்ந்திரண்டே மாணடியான்
ஞால முழுது நயந்தளந்தான்-வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தா
ருள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து. ௬

நக்கீரர்

தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளா
லானு வறமுதலா வர்நான்கு-மேனோருக்
கூழி னுரைத்தார்க்கு மொண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னாற்று மற்று. எ



மாமூலனார்

அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை-மறந்தேயும்
வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வாய்ச்சொல்
கொள்ளா ரறிவுடை யார். அ

கல்லாடர்

ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனி
னன்றென்ப வாறு சமயத்தார்-நன்றென
வெப்பா லவரு மியைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி. க

எறிசலைச்சாத்தனார்

மும்மலையு முந்நாடு முந்நதியு முப்பதியு
மும்முரசு முத்தமிழு முக்கொடியு-மும்மாவுந்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றாரன்றோ
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால். ம

மருத்துவன்றாமோதரனார்

சிந்திக்கக் கண்டநந் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்-சாந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலாற்
றலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு கக





நாகன்றேவனார்

தாளார் மலர்ப்பொய்கை தாங்குடைவார் தண்ணீமை
வேளா தொழிதல் வியப்பன்று-வாளாதா
மப்பா லொருபாவை யாய்பவோ வள்ளுவனார்
முப்பான் மொழிமூழ்கு வார். கஉ

அரிசில்கிழார்

பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறுஞ் சேரச்-சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்

வல்லாரார் வள்ளுவரல் லால். க௩

பொன்முடியார்

கானின்ற தொங்கலாய் காசிபனார் தந்ததுமுக்
கூனின் றளந்த குறளென்ப-நான்முறையான்
வானின்று மண்ணின் றளந்ததே வள்ளுவனார்
தானின் றளந்த குறள். க௪

கோதமனார்

ஆற்ற வழியுமென் றந்தணர்க ளான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதா-ரேட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினு மாற்றல்சோர் வின்று. க௫

திருவள்ளுவமாலை

நத்தத்தனார்

ஆயிரத்து முந்நூற்று முப்பத் தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்-போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம். க௬

முகையலூர்ச் சிறுகருந் தும்பியார்

உள்ளுத லுள்ளி யுரைத்த லுரைத்ததனைத்
தெள்ளுத லன்றே செயற்பால-வள்ளுவனார்
முப்பாலின் மிக்க மொழியுண் டெனப்பகர்வா
ரெப்பா லவரினு மில். க௭

ஆசிரியர் நல்லந்துவனார்

சாற்றிய பல்கலையுந் தப்பா வருமறையும்
போற்றி யுரைத்த பொருளெல்லாந்-தோற்றவே
முப்பான் மொழிந்த முதற்பா வலரொப்பா
ரெப்பா லவரினு மில். க௮

கீரந்தையார்

தப்பா முதற்பாவாற் றாமாண்ட பாடலினான்
முப்பாலி னாற்பான் மொழிந்தவ-ரெப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்
தெய்வத் திருவள் ளுவர். க௯

சிறுமேதாவியார்

வீடொன்று பாயிர நான்கு விளங்கற
னாடிய முப்பத்து மூன்றொன்றாழ்-கூடுபொரு
ளெள்ளி லெழுப திருபதிற் றைந்தின்பம்
வள்ளுவர் சொன்ன வகை. உ௰

நல்கூர்வேள்வியார்

உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தா
னுத்தர மாமதுரைக் கச்சென்ப-விப்பக்க
மாதாநு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு. உக

தொடித்தலைவிழுத்தண்டினார்

அறநான் கறிபொரு ளேழொன்று காமத்
திறமூன் றெனப்பகுதி செய்து-பெறலரிய
நாலு மொழிந்தபெரு நாவலரே நன்குணர்வார்
போலு மொழிந்த பொருள். உஉ

வெள்ளிவீதியார்

செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே-செய்யா
வதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில். உ௩





மாங்குடிமருதனார்

ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்-தீதற்றோ
ருள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு. உ௪

எறிச்சலூர் மலாடனார்

பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே
தூய துறவறமொன் றூழாக-வாய
வறத்துப்பா னால்வகையா வாய்ந்துரைத்தார் நூலின
திறத்துப்பால் வள்ளுவர் தேர்ந்து. உ௫

போக்கியார்

அரசிய லையைந் தமைச்சிய லீரைந்
தருவல் லரணிரண்டொன் றொண்கூ-ழிருவிய

திண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்
றெண்பொரு ளேழா மிவை. உகு

மோசிகீரனார்

ஆண்பாலே ழாறிரண்டு பெண்பா லடுத்தன்பு
பூண்பா லிருபாலோ ராருக-மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு. உஎ



காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்

பூயாற நூற மற்சொர மூன்றுமா
மெய்யாய வேதப்பொருள் விளங்கப்-பொய்யாது
தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனாகி
யந்தா மரைமே லயன். உஅ

மதுரைத் தமிழ்நாகனார்

எல்லாப் பொருளு மிதன்பா லுளவிதன்பா
லில்லாத வெப்பொருளு மில்லையாற்-சொல்லாற்
பரந்தபா வாலென் பயன்வள் ளுவனா
சுரந்தபா வையத் துணை உகூ

பாரதம்பாடிய பெருந்தேவனார்

எப்பொருளும் யாரு மியல்பி னறிவுறச
செப்பிய வள்ளுவர்தாஞ் செப்பவரு-முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர். ௩௰

உருத்திரசன்மகண்ணர்

மணற்கிளைக்க நீரூறு மைந்தர்கள் வாய்வைத்
துணசுரக்குந் தாய்முலை யொண்பால்-பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர் முப்பான் மதிப்புலவோர்க்
காய்தொறு மூறு மறிவு. ௩க



பெருஞ்சித்திரனார்

ஏதமில் வள்ளுவ ரின்குறள்வெண் பாவினு
லோதிய வொண்பொரு ளெல்லா-முரைத்தத்னாற்
றூதவிழ் தார்மாற தாமே தமைப்பயந்த
வேதமே மேதக் கன. ௩உ

நரிவெரூஉத்தலையார்

இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு
முன்பறியச் சொன்ன முதுமொழிநூ[illegible]
குள்ள வரிதென் றவைவள் ளுவருலகங்
கொள்ள மொழிந்தார் குறள். ௫௩

மதுரைத்தமிழாசிரியர் செங்குன்றூர்கிழார்

புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேற்
சிலவர் புலவரெனச் செப்ப - னிலவு
பிறங்கொளிமா லைக்கும் பெயர்மாலை மற்றுங்
கறங்கிருண்மா லைக்கும் பெயர். ௫௪

மதுரையறுவைவாணிகன் இளவேட்டனார்

இன்பமுந் துன்பமு மென்னு மிவையிரண்டு
மன்பதைக் கெல்லா மனமகிழ - வன்பொழியா
துள்ளி யுணர வுரைத்தாரே யோதுசீர்
வள்ளுவர் வாயுறை வாழ்த்து. ௫௫





கவிசாகரப் பெருந்தேவனார்

பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புநத
மாவிற் கருமுனியா யானைக் - கமரரும்ப
ரேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா. ௫௬

மதுரைப் பெருமருதனார்

அறமுப்பத் தெட்டுப் பொருளெழுப தின்பத்
திறமிருபத் தைந்தாற் றெளிய - முறைமையால்
வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனா
ரோதவழுக் கற்ற துலகு. ௫௭

கோவூர்கிழார்

அறமுத னான்கு மகவிடத்தோ ரெல்லாந்
திறமுறத் தேர்ந்து தெளியக் - குறள்வெண்பாப்
பண்ணிய வள்ளுவனார் பான்முறைநே ரொவ்வாதே
முன்னை முதுவோர் மொழி. ௫௮

உறையூர் முதுகூற்றனார்

தேவிற் சிறந்த திருவள் ளுவர்குறள்வெண்
பாவிற் சிறந்திடுமுப் பால்பகரார் - நாவிற்
குயவில்லை சொற்சுவை யோர்வில்லை மற்றுஞ்
செயவில்லை யென்னுந் திரு. ௫௯

இழிகட்பெருங்கண்ணனார்

இம்மை மறுமை யிரண்டு மெழுமைக்குஞ்
செம்மை நெறியிற் றெளிவுபெற - மும்மையின்
வீடவற்றி னன்கின் விதிவழங்க வள்ளுவனார்
பாடின ரின்குறள்வெண் பா. ௪௰

செயிர்க்காவிரியார்மகனார் சாத்தனார்

ஆவனவு மாகா தனவு மறிவுடையா
யாவரும் வல்லா ரெடுத்தியம்பத் - தேவர்
திருவள் ளுவர்தாமுஞ் செப்பியவே செய்வார்
பொருவி லொழுக்கம்பூண் டார். ௪௧

செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனார்

வேதப் பொருளை விரகால் விரித்துலகோ
ரோதத் தமிழா லுரைசெய்தா - ராதலா
லுள்ளுந ருள்ளும் பொருளெல்லா முண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு. ௪௨

வண்ணக்கஞ் சாத்தனார்

ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந் திதனினிது
சீரிய தென்றொன்றைச் செப்பரிதா - லாரியம்
வேத முடைத்து தமிழ்திரு வள்ளுவனா
ரோது குறட்பா வுடைத்து. ௪௩







களத்தூர்கிழார்

ஒருவ ரிருகுறளே முப்பாலி னோதுந்
தரும முதனான்குஞ் சாலு - மருமறைக
ளோர்துஞ் சமயநூ லாறுகம் வள்ளுவனார்
புந்தி மொழிந்த பொருள். ௪௪

நச்சுமனார்

எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு
வழுக்கில் வனப்பணி வண்ண - மிழுக்கின்றி
யென்றெவர் செய்தன வெல்லா மியம்பின
வின்றிவ ரின்குறள் வெண்பா. ௪௫

அக்காரக்கனி நச்சுமனார்

கலைதிரம்பிக் காண்டற் கினிதாகிக் கண்ணி
னிலைதிரம்பு நீர்மைத் தெனினுந் - தொலைவிலா

வானூர் மதியந் தனக்குண்டோ வள்ளுவர்முப்
பானூ னயத்தின் பயன். ௪௬

நப்பாலத்தனார்

அறந்தகளி யான்ற பொருடிரி யின்பு
நிறந்தநெய் செஞ்சொற்றீத் தண்டு - குறும்பாவா
வள்ளுவனா ரேற்றினார் வையத்து வாழ்வார்க
ணுள்ளிரு ணீக்கும் விளக்கு. ௪௭





குலபதிநாயனார்

உள்ளக் கமல மலர்த்தி யுளத்துள்ள
தன்னற் கரியவிரு டள்ளுதலால் - வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரு மொக்குமெனக்
சொள்ளத் தகுங்குணத்தைக் கொண்டு. ௪௮

தேனீக்குடிக் கீரனார்

பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே - முப்பாலிற்
றெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து. ௪௯

கொடிஞாழன் மாணிபூதனார்

அறனறிந்தே மான்ற பொருளறிந்தே யின்பின்
றிறனறிந்தே வீடு தெளிந்தே - மறனெறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம்வாயாற்
கேளா தனவெல்லாங் கேட்டு. ௫௰

கவுணியனார்

சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த விருவினைக்கு மாமருந்து - முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய வின்குறள்வெண் பா. ௫௧





மதுரைப் பாலாசிரியனார்

வெள்ளி வியாழம் விளங்கிரவி வெண்டிங்கள்
பொள்ளென நீக்கும் புறவிருளைத் - தெள்ளிய
வள்ளுவ ரின்குறள் வெண்பா வகிலத்தோ
ருள்ளிரு ணீக்கு மொளி. ௫௨

ஆலங்குடி வங்கனார்

வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்குந்
தெள்ளமுதின் தீஞ்சுவையு மொவ்வாதால் தெள்ளமுதம்
ண்டறிவார் தேவ ருலகடைய வுண்ணுமால்
ண்டமிழின் முப்பால் மகிழ்ந்து. ௫௯

---

இடைக்காடர்

கைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
றுகத் தறித்த குறள்.

ஔவையார்

ணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
றுகத் தறித்த குறள்.

௧௪௮

# திருக்குறள்
# பாட்டு முதற்குறிப் பகராதி

## பாட்டு முதற்குறிப் பகராதி

இ

| | | |
|---|---|---|
| ௬௫ | இடனில்பரு | ௨௨ |
| ௭௪ | இடிக்குந்துணை | ௪௫ |
| ௫௬ | இடிபுரிந்தெள் | ௬௧ |
| ௪௨ | இடிப்பாரை | ௪௫ |
| ௮௰ | இடுக்கட்ப | ௬௬ |
| ௰௭ | இடுக்கண்கா | ௱௰ |
| ௱௭ | இடுக்கண்வருங் | ௬௰ |
| ௱௰ | இடும்பைக்கி | ௬௰ |
| ௫௰ | இடும்பைக்கே | ௱௰ |
| ௭௰ | இடைதெரிந் | ௭௨ |
| ௪௮ | இணரூழ்த்து | ௬௫ |
| ௪௭ | இணரெரிதோ | ௰௧ |
| ௭௨ | இதனையிதனா | ௫௨ |

| | | |
|---|---|---|
| ரு | இமைப்பிற்கர | ககய |
| எரு | இமையாரின் | கூக |
| கூய | இம்மைப்பிறப் | கரு உ |
| உரு | இயல்பாகு | ருரு |
| கூசு | இயல்பிணை | ரு |
| | இயல்புளி | ருரு |
| அசு | இயற்றலு | உகூ |
| அசு | இரக்கவிர | ரசு |
| அசு | இரத்தலினி | உய |
| அசு | இரத்தலுமீ | ரகூ |
| அசு | இரந்துமுயி | ரஎ |
| அசு | இரப்பணிரப் | ரஎ |
| அசு | இரப்பாரை | ரசு |
| ருச | இரப்பான்வெ | ரசு |

ராகூ இரவாரிரப் ராசூ

ராஎ இரவுள்ளவுள் ராஎ

கருஉ

பாட்டு முதற்குறிப் பகராதி

## திருக்குறள்

| | |
|---|---|
| உண்ணாமையு | ௬௩ |
| உண்ணாமையே | ௨௩ |
| உதவிவரைத்த | ௧௧ |
| உப்பமைந் | ௧௫௧ |
| உயர்வகலந் | ௭௫ |

| | | | |
|---|---|---|---|
| ஈதலிசைப | ௬௪ | உயிருடம்பி | ௫௩ |
| ஈத்துவக்கு | ௬௫ | உயிர்ப்பவு | ௮௮ |
| ஈர்ங்கைவி | ௩௮ | உய்த்தல | ௪௬௯ |
| ஈவார்கணெ | ௩௯ | உரமொரு | ௯௰ |
| ஈன்றபொ | ௭ | உரனைசைஇ | ௪௨௰ |
| ஈன்றாண்மு | ௯௫ | உரனென் | ௫ |
| ஈன்றாள்பசி | ௯௯ | உருவுகண் | ௩௪ |
| உ | | உருளாய | ௯௪ |
| உடம்பாடி | ௮௯ | உரைப்பா | ௨௪ |
| உடம்பொ | ௪௧௩ | உலகத்தாரு | ௮௫ |
| உடுக்கையி | ௭௯ | உலகத்தோ | ௧௪ |



## பாட்டு முதற்குறிப் பகராதி

| | |
|---|---|
| உலகந்தழீஇ | ௪௫ |
| உலைவிடத் | ௭௭ |
| உலக்காணெங் | ௧௧௯ |
| உலர்ந்துறை | ௧௧௫ |
| உவப்பத் | ௪௰ |
| உழந்துழந் | ௧௧௮ |
| உழவினார் | ௱௪ |
| உழுதுண்டு | ௱௪ |
| உழுவாரு | ௱௩ |
| உழைப்பிரி | ௫௫ |
| உளம்போன் | ௫௮ |
| உளரெனினு | ௭௫ |
| உளரென்னு | ௪௧ |
| உளவரைத் | ௪௮ |
| உள்ளக்களித் | ௧௨௯ |
| உள்ளத்தார் | ௧௨௫ |
| உள்ளத்தாலு | ௨௯ |
| உள்ளத்தாற் | ௫௰ |
| உள்ளமிலா | ௯௰ |
| உள்ளமுடை | ௯௰ |
| உள்ளம்போ | ௧௧௭ |

கருசு

## பாட்டு முதற்குறிப் பகராதி

II ௧௧௭



ஓ



க

கா

குணனுங்குடி
குலஞ்சுடுங்
குழலினி தி
குறிக்கொண்
குறித்தது
குறிப்பறிந்து
குறிப்பிற்—ரா
குறிப்பிற்—ர்
குற்றமிலனாய்
குற்றமேகாக்
குன்றன்னார்
குன்றினனை
குன்றேறி



# திருக்குறள்

| | | |
|---|---|---|
| ௱௩. | கூத்தாட்ட | ௩௪ |
| ௱௩ | கூழுங்குடியு | ௫௬ |
| ௫௫ | கூறாமைநோ | ௭௧ |
| ௫௫ | கூற்றங்குதி | ௨௭ |
| ௯௯ | கூற்றத்தை | ௯௰ |

| | | |
|---|---|---|
| ௫௧ | கூற்றமோ | ௱௧ |
| ௮௰ | கூற்றுடன்று | ௭௭ |
| ௯௧ | **கெ** | |
| ௯௧ | கெடல்வே | ௯௰ |
| ௯௧ | கெடாஅவழி | ௮௧ |
| ௯௯ | கெடுங்கா | ௮௰ |
| ௫௧ | கெடுப்பதூஉ | ௨ |
| ௩ | கெடுவல்யா | ௧௨ |
| ௮௭ | கெடுவாக | ௧௨ |
| ௮௰ | கெட்டார்க் | ௧௫௰ |
| ௱௨ | **கே** | |
| ௭ | கேடறியா | ௭௪ |
| ௱௰ | கேடில்விழுச் | ௪௧ |
| ௭௧ | கேடும்பெ | ௧௨ |

## கோ



## பாட்டு முதற்குறிப் பகராதி

# திருக்குறள்

௫௭ ஞாலங்கருதி ௪௯

௧௧௯ ந்

௰௧ தகுதியென ௧௨

௱௪ தக்காங்கு ௫௭

௰௧ தக்காரின ௪௫

௪௨ தக்கார்தக ௧௨

௧௨௦

## பாட்டு முதற்குறிப் பகராதி

## திருக்குறள்

## பாட்டு முதற்குறிப் பகராதி

## பாடடு முத றகுறிப பகராதி

## திருக்குறள்

## பாட்டு முதற்குறிப் பகராதி

## திருக்குறள்

# திருவள்ளுவமாலை
# பாட்டு முதற்குறிப் பகராதி

## திருவள்ளுவமாலை

# சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகள்

* அரசினரால் ஒப்புக்கொள்ளப்பெற்றன

## இலக்கண, இலக்கியம்

| | ரூ. | அ. |
|---|---|---|
| தொல்-எழுத்து நச்சினார்க்கினியர் | 4 | 0 |
| தொல்-சொல்-சேனாவரையம் | 3 | 8 |
| நன்னூல் மூலம் (பாக்கட்) | 0 | 3 |
| ஐந்திலக்கணம் பகுதி-க | 0 | 12 |
| திருக்குறள் மூலம் (பாக்கட்) | 0 | 8 |
| திருக்குறள் உரை (அதி. 11-20) | 0 | 5 |
| நாலடியார் உரை | 1 | 0 |
| * ௸ மாணவர் பதிப்பு | 0 | 12 |
| களவழி நாற்பது உரை | 0 | 5 |
| * இன்னா நாற்பது | 0 | 5 |
| * கார் நாற்பது உரை | 0 | 5 |
| * இனியவை நாற்பது உரை | 0 | 5 |
| நான்மணிக்கடிகை உரை கலிக்கா | 1 | 8 |
| * திணைமொழி ஐம்பது உரை | 0 | 5 |
| * சோமேசர் முதுமொழி வெண்பா உரை | 1 | 12 |
| நளவெண்பா உரை (கலிக்கா) | 1 | 4 |
| * ௸ மாணவர் பதிப்பு | 0 | 12 |
| நைடத மூலம் ராப்பர் | 1 | 4 |
| ௸ (கலிக்கா) | 1 | 8 |
| * திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி உரை | 1 | 4 |
| குமரகுருபரசுவாமிகள் பிரபந்தத்திரட்டு குறிப்புரையுடன் | 3 | 8 |
| மதுரைக்கலம்பகம் உரை | 0 | 8 |

களவி

சைவசித்தாந்தக் கழக வெளியீடுகள்

ரூ. அ.

| | |
|---|---|
| திருவாதவூரர் புராணம் குறிப்புரையுடன் | 0 8 |
| ஸ்ரீ ஞானக்ஷியம்மை பிள்ளைத்தமிழ் | 0 5 |
| ஷை மூலமும் உரையும் | 0 8 |
| திருவிளையாடல் காண்டம் | |
| மதுரைக் காண்டம் உரை | 8 12 |
| கூடற்காண்டம் உரை | 7 8 |
| திருவாலவாய்க் காண்டம் உரை | (அச்சில்) |

## நீதி நூல்கள்

| | |
|---|---|
| *நீதிநெறி விளக்கம் உரை | 0 4 |
| *ஆத்திசூடி உரை | 1 1½ |
| *கொன்றைவேந்தன் உரை | 0 1½ |
| *நல்வழி உரை | 0 2 |
| *மூதுரை உரை | 0 1½ |
| *நன்னெறி உரை | 0 2 |
| *வெற்றிவேற்கை உரை | 0 3 |
| *உலகநீதி உரை | 0 2½ |
| நீதிநூற்கொத்து உரை (7 நூல்கள்) | 1 6 |

## சித்தாந்த நூல்கள்

| | |
|---|---|
| திருமுறை சம்பந்தர் தேவாரம் கலிக்கா | 7 8 |
| ஷை ரெக்சைன் | 8 0 |
| அப்பர் தேவாரம் கலிக்கா | 6 8 |
| ஷை ரெக்சைன் | 7 0 |
| சுந்தரர் தேவாரம் (அச்சில்) | |
| சித்தாந்த சாத்திரம் 14-ன் மூலம் | 2 8 |
| சிவஞானசித்தியார் சுபக்கம் (இருவருரையுடன்) | 4 8 |



சைவசித்தாந்தக் கழக வெளியீடுகள்

| | ரூ அ. |
|---|---|
| சிவதத்துவ விவேகம் உரை | 0 5 |

| | | |
|---|---|---|
| சதுர்வேததாற்பரிய சங்கிரகம் | 0 | 8 |
| சைவசித்தாந்த உண்மை வரலாறு | 0 | 3 |
| ஞானாமிர்தக்கட்டளை | 0 | 4 |
| சித்தாந்தப் பிரகாசிகை | 0 | 3 |
| பூப்பிள்ளை அட்டவணை | 0 | 3 |
| திரிபதார்த்த சிந்தனை | 0 | 3 |
| சைவசித்தாந்த விளக்கச் சுருக்கம் | 0 | 1 |
| சைவசித்தாந்த சந்தானாசாரியர் வரலாறும் நூல்களும் | 0 | 8 |
| சைவப்பிரகாசனம் | 1 | 0 |
| சைவசித்தாந்த உரைக்கொத்து (7-நூல்கள்) | 2 | 0 |
| வடமொழிச் சுருதி சூக்திமாலை | 3 | 0 |
| ஸ்ரீசிவஞான சுவாமிகள் பிரபந்தம் முதற்பாகம் | 1 | 12 |
| கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தர விருத்தி | 0 | 3 |
| சிவசின்னங்களணிவதேன்? | 0 | 1 |
| இந்து சமயங்களின் சுருக்க வரலாறு | 0 | 8 |
| மாதிருக்கும் பாதியன் | 0 | 1 |
| சைவசமய வளர்ச்சி | 0 | 1 |
| திருக்கைலாய ஞானவுலா உரை | 0 | 5 |

## புகழ்நூல்கள்.

| | | |
|---|---|---|
| சேக்கிழார் பிள்ளைத்தமிழ் உரை | 0 | 10 |
| குலசைப் பிள்ளைத்தமிழ், உலா | 0 | 8 |
| விநாயகர் பிள்ளைத்தமிழ் | 0 | 8 |
| திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் | 0 | 6 |

கவை

## சைவசித்தாந்தக் கழக வெளியீடுகள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் | 0 | 8 |
| அகத்தியர் தேவாரத்திரட்டு மூலம் | 0 | 8 |
| அகத்தியர் தேவாரத்திரட்டு உரை | 1 | 12 |
| திருவிசைப்பா திருப்பல்லாண்டு மூலம் | 0 | 8 |
| திருவாசக மூலம் பாக்கட் | 1 | 8 |
| டிமி ரெக்சின் | 3 | 0 |

மேஷ மலர்-௨

" மலர்-௩

நமச்சிவாயமாலை உரை

திருமுருகாற்றுப்படை மூலம்

திருச்செந்திற் கலம்பகம்

கந்தரலங்காரம் கந்தரனுபூதி

கந்தரந்தாதி

திருவகுப்பு-(25-வகுப்புகள்)

கந்தர் கலிவெண்பா உரை

திருத்தணிகை யாற்றுப்படை

கந்தர் சஷ்டி கவசம்

அருட்பா மூலம்

திருப்புகழ்த்திரட்டு (105)

# முருகன் புகழ்மாலை

0 3
0 3
0 2
0 2
0 2
0 4
0 3
0 2
0 5
0 6
0 2
0 1
2 0
0 8

(அச்சில்)

## உரை நடை நூல்கள்.

| | |
|---|---|
| *அறிவுரைத்திரட்டு | 0 12 |
| *சீவகாருணிய ஒழுக்கம் | 0 4 |
| *மனுமுறைகண்ட வாசகம் | 0 8 |
| ஷை கவிக்கா | 1 0 |
| அரதத்தாசாரியார் சரித்திரம் | 0 4 |



P RAMANATHAN, K T, K.C C.M.G.

Meenambal Press

**The Hon Sir Ponnambala**
KT K C M

MANGALA SULC

Lakshmivan Mahasaur

Maharajadhirajo Bhava

Sankirtaramanatha Kiri

Sampurnakamo Bhava

**Subha Masti**